சிவமயம்

குமரகுருபரன்



மலர் 18] 1967-ஆம் ஆவணி மீ 1-ம் உ (17-8-67) [இதழ் 8

தனிப்பிரதி 25 பைசா வருடச் சந்தா ரூ. 3-00

ஆசிரியர் குழு

உள்ளுறை

பக்கம்

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 18 | பிலவங்க ஞூ ஆவணித் திங்கள் 1ம்வ [17-8-67] | இதழ் 8

நீதிநெறி விளக்கம்

(கட்டுரை 12)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

இவறன்மை கண்டும் உடையாரை யாரும்
குறையிரந்தும் குற்றேவல் செய்ப — பெரிதும்தாம்
முற்பகல் நோலாதார் நோற்றுரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை யன்று. (13)

செல்வம் உடையவர் பலர் அச் செல்வத்தொடு உலோப குணமும் உடையவர். அது தெரிந்தும் எல்லாரும் அவ்வுடை யாரிடத்திற்சென்று தமக்கு ஆகவேண்டும் இன்றியமையாச்

செயல்களைச் சொல்லிக் குறை வேண்டுவர். அம்மட்டுமோ அச்செல்வர் காலாலிடுங் கட்டளையைத் தலைமேற் கொண்டு குற்றேவலுஞ் செய்வர். இதற்கு என்ன காரணம்? உடையார் முன் இல்லார் ஏக்கறுவர். (ஆகையால் தாழ்வர்) உலகில் உடையார் சிலர். இல்லார் பலர். நோற்பார் சிலர். நோலாதார் பலர். தாம் பெரிதும் முற்பகல் நோலாதவர், நோற்றாரைப் பின் சென்று குறையிரத்தலும குற்றேவல் செய்தலும் அறிவுக் குரியதே. கல்லாமையால் வளரும் அறியாமையால் அன்று. அறிவால் தான் நோற்றாரை நோலாதார் பின் சென்று குறை வேண்டுகின்றனர்.

தீவினைப்பயனாக மரபுவழி நின்று (ஆசிரியரிடத்துக் குறையிரந்தும் குற்றேவல் செய்தும் ஏக்கற்றுங்) கல்லாதார் பின்னரும் அறிவாற் பெருமையுடையாரும் செல்கை அவிவேகம் அன்று, விவேகமே ஆதும். புகழ்தல் போலப் பழித்தல் இது,

"கரும வரிசையாற் கல்லாதார் பின்னும்
பெருமை யுடையாரும சேறல் — அருமரபின்
ஓதம் அரற்றும் ஒலிகடற் றண்சேர்ப்ப
பேதைமை அன்றுஅது அறிவு." (நாலடி 249.)

'கருமவரிசை' ஊழ்வினைத்திறமுமாம், கல்லாதாரைத் தழுவுதல் தீவினைப்பயனே, இதன் ஈற்றடிக்கு, கல்லாதவர் பின் செல்லுதல் அறியாமையாம். அஃது அறிவுடைமை அன்று எனத் துணியும பொருளும் உரித்து.

கற்றுணர்ந் தோரைக் கூடுந்தொறும் இன்பங்கூடும். கல்லாக்கயவரைப் பிரியுந் தொறும் துன்பம் ஓடும். செல்வம் உடையார் பின்னும் கல்வியில்லார் பின்னும் செல்கையின் அறியாமை இவ்விருபாட்டாலும் உணரலாயிற்று.

நீதிநெறிவிளக்கத்திலே செல்வம் உடையராய் உலோப குணம் விடாதாரைக் குறித்தது. இந்நாலடியாரிலே உள்ளது கல்வியிலராய்ச் செல்வ முடையாரையும் இல்லாரையும் குறித்த பொருள். இருதிறத்திலும் பின்செல்லல் அறியாமையாதலை யுணர்த்தினர் அதனதன் ஆசிரியர்.

நீதிநெறிவிளக்கச்செய்யுளை நன்கு விளக்கும் ஒரு நாலடிப் பாடலையும் ஈண்டுணர்தல் நன்று. எறும்புகள் உண்ணக் கிடைக்காத பாத்திரத்திலே ஊற்றிவைத்த நெய்யை, தாம் உண்ணக் கிடைக்கவில்லையே என்று அவை புறம்போய்த் தொலையாமல், அப்பாத்திரத்தை விட்டு நீங்காமலே (அதன்) புறத்தே சுற்றிச்சுற்றி ஊர்ந்து கொண்டேயிருககும். அது போல, ஈர்ங்கை விதிராத கயவர் என்று அறிந்திருந்தும், செல்வம் உடையவரை உலகவர் யாவரும் சேர்ந்து, விட்டு நீங் காதவராய்க் குறையிரந்தும் குற்றேவல் செய்தும் தம் அறி யாமையால் வருந்துவர்.

> "ஆகா தெனினும் அகத்துநெய் யுண்டாகிற்
> போகா தெறும்பு புறஞ்சுற்றும் — யாதும்
> கொடாஅர் எனினும் உடையாரைப் பற்றி
> விடாஅர் உலகத் தவர்." (நாலடி. 337)

உட்புகுந்து உண்ணக்கூடாதபடி யிருக்கும் நெய்ப்பாண்டத்தை ஆசையால் விடாமற் சுற்றிக் கொண்டிருக்கும் எறும்புகள் தம் ஆசைக்குத்தக ஒருபொருளும் ஈயாத பரம லோபியாயிருக்கும் செல்வரை (ஆசையால்) விடாமற் சுற்றிக் கொண்டிருக்கும் பேதைகளுக்கு உவமையாயின.

அவ்வுலோபிகள் தம் வாழ்நாளைத் தாமே வெறுத்துக் கொள்ளத்தக்க கூட்டத்துள் அடங்கும் புல்லியர்கள் என்றும் அந்நீதிநூல் ஓதுகின்றது. "(1) நல்லவை நாள்தொறும் எய் தார். (2) அறஞ்செய்யார் (3) இல்லாதார்க்கு யாதொன்றும் ஈகலார். (4) எல்லாம் இனியார் தோள் சேரார் (5) இசைபட வாழார் முனியார்கொல் தாம்வாழும் நாள்."?

அறம்பொருளின்பங்களைத் தாம் அடையாமலும் உலகர்க்கு அறமுதலியன செய்து இருமைக்கும் முறையே புகழும் புண்ணி யமும் தேடாமலும் வீணபொழுது போக்கும் பேதையர்க்குத் தம் வாணளில் வெறுப்புண்டாகாமலிருப்பது பெருவியப்பே. அவர் இருந்தென்ன? இறந்தென்ன?? இனியார் தோள் சேரார் என்ற தால் இனியார் தோள் சேர்வர் எனபது உட்கோள். இனி யார் தோள் சேர்வர்? நல்லவை-கல்வி, கேள்வி, நீதிநெறியிற்

பொருள் சேர்த்தல் முதலிய நல்ல அவையுமாம். இல்லறத்தில் வழுவாதார் இம்மைப்பயனுய் இவ்வுலகில் நிகழ்ந்து (பிரசித்தி யாய்) நிலைபெறும் இசைகளையுற்று வாழ்வர். வழுவினோர் இங்கு இவ்வண்ணம் வாழார். அதற்கு முன்னை நோன்பின்மையே காரணம்.

நோலாதார் நோற்றுரைப் பின்செல்லல் கற்பன்று. கல்லாமையே என்பது கருத்து. அதனை மாற்றிக் கல்லாமையன்று, கற்பு என்றது வஞ்சப்புகழ்ச்சி. முற்பகல் என்றது இங்குப் பழம்பிறவியைக் குறித்தது.

'பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு
பிற்பகல் தாமே வரும்'

என்னுந் திருக்குறளிலே 'முற்பகல் பிற்பகல் என்பன பின் முனுகத்தொக்க ஆரும்வேற்றுமைத் தொகை' என்றலும், பகலது முற்கூறு அதன் பிற்கூறு என்று பொருளுரைத்தலும் பரிமேலழகருரையையுணர்ந்தார் உணர்வர்.

'பகல் வெல்லுங் கூகையைக் காக்கை' என்றதிற் பகல் பகற்பொழுதினைமட்டும் உணர்த்தும்.

'பகல் கருதிப் பற்றுசெயினும்' என்றதிலே 'பகுதல்' என்ற பொருட்டாம். அப்பொருட்டே இந்நீதிநெறி விளக்கத்தினும் அமைந்து கருத்து வேறுபட்டது. முற்பிறவியின் இப்பிறவி, கூடாதுபகுதல் உடைத்தே. பகல் இரவு என்புழியும் இப் பொருளின் அடியே உரியதாகும். ஒருநாளின் பகுதல் அது. இது பிறவியின் காலத்துக்குரிய பகுதல். 'பகல்' என்னுஞ் சொல்லினதாராய்ச்சிமிக்க இன்பம் விளைக்கும் ஆயினும் ஈண்டுப் பெருகுமென்றஞ்சிவிட்டாம்.

'இவறலும் மாண்பிறந்த மானமும் மாணு
உவகையும் ஏதம் இறைக்கு,'

என்றதன் உரையிலே பரிமேலழகர், 'வேண்டும் வழிப் பொருள் கொடாமை', இவறல் என்றுரைத்தார். இவறல்+மை=இவறன்மை தவறல், சுவறல் முதலியவற்றைப் போல்வதொரு தமிழ்ச்சொல்

இவறன்மையுடையார் இசையொழிவர். இருந்தால்தானே ஒழிவது? இசையே பெருதார் ஒழிவாரல்லார். வகையுறுவார்.

'வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெருஅ விடின்.'
'வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.'

உலோபிகளின் யாக்கை இசையிலா யாக்கை. அவ்யாக்கையைப் பொறுத்த நிலம் வசையிலா வண்பயன் குன்றும். உயிருண் டாயினும் அதனுற் பயன் கொள்ளாமையின் யாக்கை என்றும் அது பூமிக்குப் பாரம் ஆதலின் பொறுத்த நிலம் என்றும் கூறினர் புகழில் வீறினர் ஆகிய திருவள்ளுவர். பயன் குன் றும் நிலம் குன்ருது. நிலம், இடம். பயனது குன்றல் இடத்து நிகழ் பொருளது தொழில். 'வசையொழிதலாவது இசையென்னும் எச்சம் பெறுதலாயினமையின் இசையொழிதலாவது வசைபெறுதலாயிற்று. மேல் 'இசையிலா யாக்கை, என்றதனை விளக்கியவாறு', 'வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்' மறுமைப்பயன் உலோபிகளுக்கு எய்துமோ? இவ்வுலகிற் புகழும் தேவருலகிற் போகமும் இல்லறத்திற்குப் பயன். இவ்விரண்டும் அவ்வுலோபி களுக்கு இல்லை. அதனுல் இருமைப் பயனும் இழப்பவரே அவ் வுலோபிகள். அவர்கள் தேடித் தொகுத்த செல்வம் தமக்கேனும் பயன் அளித்ததோ? இல்லை. தமக்கும் பயன் செய்யாதது, பிறர்க்கும் பயன் படாதது. அச்செல்வத்தால் அவ்வுலோபிகள் அடைந்த பயன் என்ன? பயன் உண்டு. இராப்பகலாக் காத்த தும் நாள்தொறும் எண்ணியெண்ணிச் சரி பார்த்து வந்ததும் ஆகிய பயன் அன்றி வேறில்லை.

அவ்வுலோபிகள் அச்செல்வத்தைத் தம் செல்வம் என்றே சொல்லிக்கொள்கின்றனர். அவர்கள் அச்செல்வத்தைத் தாமும் அநுபவித்ததில்லை, பிறர்க்கும் அநுபவிக்க உதவியதில்லை. அத்திறத்தில் அச்செல்வத்தை நோக்கில், பிறரும் அநுபவிப்ப தில்லை ஏனையோர்க்கு அநுபவிக்கக் கொடுப்பதுமில்லை. அதனுல், யாவரும் அச்செல்வத்தை 'எம்செல்வம்' 'எம்செல்வம்' எனச் சொல்லிக் கொள்வதில் என்ன தடை? ஒரு தடையும் இல்லை. ஒருவன் செல்வம் குவிந்திருக்குமிடம் சென்று, குவித்

தவனை நோக்கி, 'நீ தேடிக்குவித்த செல்வம் என்செல்வமும் ஆகும். ஏன் எனில் அச்செல்வத்தை நீயும் அநுபவிக்கவில்லை. எனக்கோ பிறர்க்கோ அநுபவிக்க நீ உதவியதும் இல்லை. அதனை நானும் அநுபவிக்கவில்லை. பிறர் அநுபவிக்கத் தருதலும் எனக்கில்லை. அதனால் நாம் இருவேமும் பிறரும் அதனை தனித்தனி 'என்செல்வம்' 'என்செல்வம்' என்று சொல்லிக் கொள்வதிலே உனக்கு என்ன தடை உண்டு' என்றான். 'அப்படி ஒரு தடையும் இல்லை. நீ தேடியிருந்தால் சொல்லிக்கொள்' என்றான் உலோபியாகிய செல்வன்.

காலப்போக்கில் அச்செல்வம் ஒன்றும் சொல்லாது, செல்வம் என்று எப்படியோ சென்றது. அது செல்லவே அதனால் வருந்துயர் தரித்திரம் என்று வருந்தினர் உலோபியார். அவ் வருத்தம் 'என்செல்வம்' என்று சொல்லத் தடையுண்டோ என்று கடாவிய மற்றவனுக்கு உண்டாயிற்றிலது. சேர்த்த லோபிக்கே வருத்தம். இதுவே அவ்விருவர்க்கும் உள்ள வேறுபாடு, எனது எனது என்றதில் வேறுபாடு இல்லை.

> "எனதென தென்றிருக்கும் ஏழை பொருளை
> எனதென தென்றிருப்பன் யானும் — தனதாயின்
> தானும் அதனை வழங்கான் பயன்துவ்வான்
> யானும் அதனை அது." (நாலடி 276)

இப்பாட்டிலே அவ்வேறுபாடு இல்லை. ஒன்று பாடுவது இது. இதில் 'எனது' என்றது 'யான்' என்றதனடியாப் பிறந்து அகரச்சாரியையும் 'து' விகுதியும் பெற்ற ஒன்றன்பாற் குறிப்பு வினைப்பெயர். ஆறனுருபேற்றதன்று. எனது எனது என்ற அடுக்கு, செல்வப்பற்று மிகுதியை விளக்கி நின்றது. இரண்டாவதடியில் துணிவுணர்த்தியதுமாம். தன்னொடு இயைபில்லாத பொருளை (உடல் முதலிய புறப்பொருளை) எனது எனக் கருதி அப்பொருளினிடத்துப் பற்றுச் செய்யும் பெற்றி மமகாரம், உடம்பிலிருந்து செலுத்தும் உயிரை 'யான்' என்பது அகங்காரம். 'நுண்ணுணர்வின்மை வறுமை', அறிவாகிய செல்வமில்லாத லோபியை 'ஏழை' என்றார்.

(தொடரும்)

மணிமொழி விளக்கம்

சித்தாந்தக் கலைமணி, மகா வித்துவான்,
திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள்,
தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி, பேராசிரியர்,
அண்ணாமலை நகர்.

திருவம்மானை

'பாட்டு' என்பது, மக்கள் வாழ்க்கையில் இன்பம் பயக்கும் ஒன்று. தாயின் தாலாட்டுப் பாட்டைக் கேட்டுக் குழந்தைகள் நன்றாக உறங்குகின்றன. ஏர் உழுபவன், ஏத்தம் இறைப்பவன், வண்டிகளில் சுமையை ஏற்றுபவன், இறக்கு பவன், இவர்போன்ற மற்றும் தொழில் செய்வோர் பலர், தங்கள் வருத்தம் தோன்றாது ஊக்கம் மிகுதற்பொருட்டு எவையேனும் சில பாட்டுக்கள் பாடுவதைப் பார்க்கின்றோம். இவற்றால், 'பாட்டுக்கள், துன்பத்தை மறக்கச் செய்யும் தன்மையுடையன' என்பது தெரிகின்றது.

இனித் துன்பம் உள்ள இடத்தில் பாட்டுக்கள் தோன்றுவது சிறுபான்மையே. பெரும் பான்மையும் இன்ப மிகுதியிலேதான் பாட்டுக்கள் வெளிப்படுகின்றன. கடவுள் விழாக்கள், மக்களது மணவினை முதலிய மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளில் பாட்டுகள் பெரிய அளவில் நிகழ்வதைக் காணலாம். நம் நாட்டில் சிறு பெண்கள் விளையாடும் விளையாட்டுக்களில் பாட்டு இல்லாத விளையாட்டு இல்லை என்றே சொல்லலாம். இப்பாட்டுக்கள் பல, 'நாட்டுப் பாடல்' என வழங்கிவருதல் யாவரும் அறிந்தது.

மக்கள் வாழ்க்கையில் பாட்டு இவ்வாறு ஒன்றிக்கிடப்பதை அறிந்த நம் சமயாசாரியர்கள், இறைவனது பெருமைகளை

தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி பேராசிரியர், சித்தாந்தக் கலைமணி, மகா வித்துவான், திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள், நம் வேண்டுகோளுக் கிணங்கி திருவாசக உரை 'குமாரகுருபரனுக்கு'த் தொடர்ந்து உதவ இணங்கியுள்ளார்கள்.

எடுத்துவிளக்கும் பாடல்கள் பலவற்றை உலகிற்கு அருளிச் செய்து தந்தார்கள். அவற்றை மக்கள் ஆர்வத்துடன் பாடி அவனது திருவருளுக்கு உரியவரானார்கள். மகளிர் விளையாட்டுக்கென அமைந்த பாடல்கள் மாணிக்கவாசகரது மணிமொழியாகிய திருவாசகத்துள் சிறந்து விளங்குகின்றன. அவற்றுள் 'திருஅம்மானை' என்பது ஒன்று.

'அம்மானை' என்பது, மகளிர் சிலர் சில காய்களை வானத்தில், எறிந்து பிடித்து ஆடும் ஒருவிளையாட்டு. அவ்விளையாட்டில் பாடப்படும் பாட்டே அம்மானைப்பாட்டு. மாணிக்கவாசகர் அருளிச் செய்த அம்மானைப் பாட்டு ஒவ்வொன்றும் அவ்வாறு அடிகளை உடையது.

திருவாசகத்துள் காணப்படும் விளையாட்டு மகளிர், உலக நிலையில் இருப்பவரல்லர்; சிவபெருமானது திருவருளைப் பெற்று விளங்கும் சிவபத்தி முதிர்ச்சி உடையவர்கள். அதனால் அவர்கள் தங்கள் விளையாட்டுக்களில் பாடும்பொழுது, சிவபெருமானையன்றி வேறொன்றையும் பாடமாட்டார்கள். காதலைப் பாடினும், அக்காதல், அவர்கட்குச் சிவபெருமான்மீதுள்ள காதலாய்த்தான் இருக்கும். ஆகவே, இங்கு அம்மானையாடும் மகளிரது பாடலும் அப்படிப்பட்டவையாகக் காணப்படுதல் இயல்பே.

முதற்பாட்டு

குழாமாகக் கூடி விளையாடும் மகளிர் யாவரும் தோழமை முறையில்தான் இருப்பர். அவர்களில் ஒருத்தி அம்மனைக் காயை முன்னே எடுத்து, மற்றவர்களைப் பார்த்து, 'யான் நம் பெருமானது திருவடிகளை நினைத்துப்பாடி இதனை மேலேஎறிகின்றேன்; உங்களில் திறமையுள்ளவள் பிடிக்க' எனச்சொல்லி ஒருபாட்டைப்பாடி எறிந்தாள்.

அவள் முன்னைத் தவமிகுதியால் இளமையிற்றானே சிவபெருமான் ஆசான் மூர்த்தியாய் வந்து அவளது, 'திருப்பெருந்துறை' என்னும் ஊரின்கண் அருள்செய்யப் பெற்றவள்; அதனால், உலகப் பற்றுகளை எல்லாம் அறவே துறந்து சிவபெரு

மானது திருவடிகளையே பற்றுகக் கொண்டு வாழ்பவள். அவள் பாடும் பாட்டு எத்தகையதாய் இருக்கும்?

திருச்சிற்றம்பலம்

செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

இஃது அவள் பாடிய பாட்டு

சிவபெருமான் தெய்வ வடிவில் வானவெளியில் தோன்றிச் சிறிது நின்றுஅருள்வழங்கி மறைந்துவிடுதல் என்பதில்லாமல், மானிட வடிவங்கொண்டு தனது அருமையான மலர்போன்ற பாதங்கள் மண்ணில் பட எழுந்தருளிவந்து பன்னாள் உடன் இருந்து அளவளாவி ஞானத்தை வளர்த்தருளிய பெருங்கருணைத் திறத்தை நினைந்த அப்பெண் தன்னை மறந்து அதனைப் பாடுகின்றாள்.

'நம் சிவபெருமானது திருவடிகள், கண்டாரது கண்ணையும்; கருத்தையும் தம்பால் ஈர்த்துக்கொள்ளும் பேரழகுடையவை; அழகிற்கும், மென்மைக்கும் அன்றலர்ந்த செந்தாமரை மலரை அவற்றிற்கு ஒருவாறு ஒப்புமை கூறலாம். அத்தகைய திருப் பாதங்கள் மண்ணில் படும்படி நம்முன் எழுந்தருளிவந்தான்' என்று அப்பாதங்களின் பெருமையை நினைந்து உருகுகின்றவள், 'அவைகள் என்ன அத்துணை எளியனவா?' என்று, அவற்றின் அருமையை நினைந்து, 'செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண் பரிய-பொங்கு மலர்பாதம்' என்று சொல்லிப் பரவசப்படுகின்றாள்.

'சிவபெருமானது செந்தாமரை மலர்போன்ற பாதங்களைக் காண எத்துணைப் பேர், எவ்வளவுமுயற்சியை மேற்கொண்டனர்? மேற்கொண்டும் கண்டனரா? இல்லை. முயன்று இளைத்ததுதான் பயன்' என்பதற்கு திருமால் அடிதேடிய வரலாற்றை நினைவு கூர்ந்தாள். 'பாதங்கள் செந்தாமரை மலர்போன்றிருத்தலால், அதனைக் காணும் கண்ணும் செந்தாமரைபோல உடைய திரு மால், அது தன்னால் இயலும் எனக்கருதித் தேடத்தொடங்

கிறன்' என்றற்கு, 'மால்' என்று மட்டும் வாளா கூருது, 'செங்கண் மால்' என்றுள். கண் செந்தாமரைபோல் அமைந் திருத்தல்மட்டும் அன்று; ஈரடியாலே மூவுலகத்தையும் அளந்த தனது ஆற்றலையும் எண்ணிப் புறப்பட்டான்' என்றற்கு, 'நெடு மால்' என்ருள். நெடுமால்-நீண்ட உருவத்தைக் கொண்ட மாயோன். 'மால்' என்பது, 'பெரியோன்' எனப்பொருள் தருதல் பற்றி, அப்பெயரையே கூறினுளாயினும், 'மயக்கத்தை உடை யவன்' என மற்ருெரு பொருளையும் தோற்றுவித்து நகைவிளைத் தற் பொருட்டும் அப்பெயரைக் கூறினுள் என்க.

"சென்று இடந்தும்" என்பது, 'இடந்து சென்றும்' என மாற்றிக் கொள்ளுதற்குரியது. இடத்தல்-பூமியைக் கிளறுதல். எனவே, மாயோன் வராக வடிவம் கொண்டமை பெறப்பட்டது. திருமால் முன்பு வராக வடிவம் கொண்டது, பிரளய வெள்ளத் தில் ஆழ்ந்த பூமியை அதனினின்றும் எடுத்து நிறுத்துதற் பொருட்டாம். 'அச்செயலில் அப்பொழுது அவன் வெற்றி பெற்றமையைக் கருதிச் சிவபெருமானது திருவடியைக் காண வராக வடிவத்தைக் கொண்டான்' என்பது கருத்து. சிவபெரு மானது திருவடிகள் நம்முன் காணப்பட்டதுபோல் நிலத்தின் மேல் இல்லாது, நிலத்தை ஊடுருவி நின்றமையால், மாயோன், வராக வடிவம் கொண்டு தேடவேண்டியதாயிற்று. கண்ணோ, செந்தாமரைக் கண்: ஆற்றலோ, மூவுலகையும் அளந்து காட் டக் கூடிய ஆற்றல்; கொண்ட வடிவமோ, பூமியைப் பிரளய வெள்ளத்திலிருந்து மேலே தூக்கி நிறுத்திய வடிவம். இருந் தும் வெற்றி கிட்டியதா எனின், 'இல்லை' என்றற்கு, 'சென்றி டந்தும் காண்பரிய' என்ருள். பாதம், பாதாளம் ஏழினும் உருவிக் கீழ்ப் போயினமையின் காணப்படாதாயிற்று.

'இப்பெண்ணுக்குச் சிவபெருமானிடத்தில் மிக்க அன் பிருப்பது போற்றுதற்குரியது. ஆனல், திருமாலிடத்தில் இவ ளுக்கு ஏன் இவ்வளவு வெறுப்பு' என்று கேட்கலாம். இவ ளுக்குத் திருமாலின் மீதுள்ள வெறுப்பினுல் இவ்வாறு பாட வில்லை. 'எவ்வளவு பெரியவர் கட்கும் கிட்டாத பேறு, மிகச் சிறிய நமக்குக் கிட்டியதே' என்ற அருமையை நினைத்து மனம் பரவசப்படுகின்ற காரணத்தால்தான் இவ்வாறு பாடுகின்ருள்.

அஃதன்றியும், மற்றோர் உண்மையும் இதனால் புலனாகின்றது. திருமால் எத்துணைப் பெருமையைப் பெற்றிருந்தும் சிவபெருமான் திருவடியை ஏன் காண இயலவில்லை? 'யான் பெரியவன்; எனக்கு இத்துணைப் பெருமை இருக்கிறது' என்ற செருக்குடன் இறைவனைக் காணச்செல்வோர்க்கு அவன் எதிர்ப்படமாட்டான்; செல்லுந்தோறும், செல்லுந்தோறும் அப்பால் விலகிக் கொண்டேதான் செல்வான். செருக்கின்றி, 'நமக்கும் இறைவனது திருவருள் கிட்டுமோ' என்று பணிந்து கிடப்பவர்முன் அவன் தானே வலிய வந்து அவர்களை ஆட்கொள்வான்' என்ற உண்மை இதனால் நன்கு விளங்குகிறது. மேலும், 'மாயைக்கு உட்பட்டவை உயிர்கள்; மாயைக்கு அப்பாற்பட்டவன் இறைவன்; ஆகவே, அவனே அருள்கூர்ந்து தன்னைக் காட்டினாலன்றி, அவனைத் தேடி யார் காணமுடியும்' என்பதும் இதனால் விளங்கும். இவ்வுண்மைகளெல்லாம் விளங்குதற்காகவும், திருமால் அடி தேடிய வரலாற்றை இவள் கூறினாள். சிவபெருமான் வலிய வந்து தன்னை ஆட்கொண்டதை "அறை கூவி" என்றதனால் குறிக்கின்றாள்.

'திருமால் வேறு, சிவபெருமான் வேறா? ஒருகடவுள்தானே மும்மூர்த்திகளாய் விளங்குகிறான்'? "ஒரு விண்முதல் பூதலம்-ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்-படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை" என்று ஞானசம்பந்தரும், "நாரணன்காண் நான்முகன்காண் ... ... காளத்தி காணப்பட்ட கணநாதன்காண்" என்று அப்பரும், "அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்-அரனாய் அழிப்பவனும் தானே" என்று சேரமான் பெருமாள் நாயனாரும், மற்றும் பலரும் இவ்வாறு ஒருகடவுளே மும்மூர்த்திகளாய் நின்று, படைத்தல், காத்தல், அழித்தல் என்பவற்றை செய்கின்றான் என்று தானே கூறுகின்றனர்? அவ்வாறு இருக்கும் பொழுது, 'திருமால் சிவபெருமான் திருவடியைத் தேடிச் சென்றார் என்றும், சென்றும் காண இயலாமல் இளைத்து திரும்பினார் என்றும் கூறுதல் எவ்வாறு பொருத்தமுடையதாகும்' என்று ஐயுறலாம்.

ஞானசம்பந்தர் முதலிய ஆசிரியன்மார்கள், 'ஒருவனே மூவராய் நிற்கின்றான்' என்று மட்டுந்தான் கூறுகின்றார்களோ? திருமாலும், பிரமனும் சிவபெருமானது அடிமுடிகளைத்

தேடிக் காணமாட்டாமல் திரும்பியதைக் கூறவில்லையோ? இரண்டையுந்தான் கூறுகின்ருர்கள். இரண்டையும் கூறுகின்ருர்கள் என்ருல், அவர்கள் கருத்து என்ன? அதைத்தான் ஆய்ந்துணர்தல் வேண்டும்.

இறைவன் படைத்தல் முதலிய தொழில்களைத் தானே செய்வதும் உண்டு; பிறரைக் கொண்டு செய்வித்தலும் உண்டு. தானே செய்யுமிடத்து, 'ஒருவனே பலராகவும் இருக்கின்ருன்' என்றும், பிறரைக்கொண்டு செய்விக்குமிடத்து, 'அவரவரும் வேறு வேறு' என்றும் பெரியோர் கூறுவர். அவற்றுள், முன்னைய வகை, 'சம்பு பட்சம்' என்றும், பின்னைய வகை 'அணு பட்சம்' என்றும் சொல்லப்படும். சம்பு-இறைவன். அணு-ஆன்மாக்கள். பிறரைக் கொண்டு செய்விக்கும் நிலை இருப்பதால், அந்த அதிகாரத்தை-பதவியை அடையச் சிலர் விரும்புகிருர்கள். விரும்புகின்றவர்கள் அதற்கேற்ற புண்ணியங்களைச் செய்கின்ருர்கள். பின் அப்புண்ணியத்தின் பயனுக ஒவ்வோர் அதிகாரத்தை ஒவ்வொருவர் இறைவன் தரப் பெறுகின்ருர்கள். இவர்களே அணுபட்ச மூர்த்திகள். இவர்கட்கு, ஆன்மாக்கட்கு உள்ள குணங்கள் எல்லாம் உண்டு. நினைப்பு, மறப்பு – விருப்பு, வெறுப்பு – பிறப்பு, இறப்பு – வெற்றி, தோல்வி முதலியவை, உயிர்களுக்கு உள்ள குணங்கள். இவைகளெல்லாம் பிரமன் திருமால், இந்திரன் முதலிய தேவர் பலர்க்கும் இருந்தன எனப் புராணங்கள் பலபடக் கூறுதல் யாவரும் அறிந்தது. இக் குணங்களெல்லாம், சாத்துவிகம், இராசதம், தாமசம் என்னும் முக்குணங்கட்கு உட்பட்டவை. எனவே, இவற்றை உடைய மூர்த்திகள் குணமூர்த்திகள். இறைவன், முக்குணங்கட்கு அப்பாற்பட்டவன் – குணுதீதன். அதனுல், அவன் நிர்க்குண மூர்த்தி. எனவே, எந்தப் பெயரில், எந்த வடிவத்தை உடையவராக, எந்தத் தேவரைக் கூறினுலும் அங்கு, மேலே சொல்லப்பட்ட உயிர்க்குணங்கள் குறிக்கப்பட்டால், அவர்களை, 'ஆன்ம வர்க்கத்தினராகிய அணுபட்சத்தினர்' என்றும், அக்குணங்கள் குறிக்கப்படாது நிர்க்குணத் தன்மை குறிக்கப்பட்டால், அவர்கள் இறைவனது பல்வேறு நிலைகளாகிய சம்பு பட்சத்தினர் என்றும் அறிந்து கொள்ளுதல் வேண்டும். ஆகவே பெரியோர்கள் சம்பு பட்சத்தைக் கருதுமிடத்தில், 'எல்லாத் தேவரும்

ஒருவனே' என்று ஒன்ருகவும், அணுபட்சத்தைக் கருதுமிடத்தில் 'தம்மில் உயர்வும்' தாழ்வும் உடைய பலர்' என்று வேறு வேருக வும் கூறுவர் என்பது விளங்கும். இங்கு இறைவனது திருவடி யின் அருமை, பெருமை முதலியன விளங்குதற் பொருட்டு,அணு பட்சம் எடுத்துக் கூறப்பட்டது என்க.

பிறப்பு, ஒன்று மற்ருென்றிற்குக் காரணமாய், அம்மற் ருென்று, பினனும் ஒரு பிறபபிற்குக் காரணமாய் முடிவின்றிச் சங்கிலித் தொடர்போலத் தொடர்ந்து நிற்கின்றது. அத்தொடர், ஆன்மாக்களைப் பற்றி ஈர்க்கின்றது. அதனை அவ்வாறு பற்றி ஈர்க்காதவண்ணம் அறுத்தெறிய வல்லவன் யார்? மேற்சொல் லிய உயிர்க்குணங்கள் இல்லாத சிவபெருமான் ஒருவனே. ஆதலின், 'அவன எங்கள் பிறப்பை அறுத்திட்டான்', என்ருள்.

இவ்வளவு உயர்ந்த பேற்றிற்குரியவர்கள், சிறந்த தகுதி யுடையவர்களே; அங்ஙனமாக, அத்தகுதி சிறிதும இல்லாத எங்களுக்கும் அப்பேற்றை அளித்தான என்பதற்கு, "எம் தரமும் ஆட்கொண்டு" என்ருள். தரம்–நிலை; தகுதி. இததகுதியினமை, "பொற்றவிசு நாய்க்கிடுமாறு" என்ருற்போலப் பலவிடத்தும் கூறப் படுகிறது. "தரமும்" என்றதை, 'தரத்திற்கும்' எனக் கொள்க.

இறைவன் தன்னை வந்து ஆட்கொண்ட திருப்பெருந் துறைத தலமும் இவளுக்கு அவன் திருவருளாகவே காட்சி யளிக்கின்றது. அதனுல், "தெங்கு திரள்சோலைப் பெருந்துறை" என் கின்ருள். திருப்பெருந்துறையைச் சுற்றி நெருங்கி நிற்கின்ற தென்னை மரங்கள், வெயிலில் நடந்து,வெப்பததால் இளைத்து வரு வோர்க்குக் குளிர்ந்த நிழலைத் தந்து, இனிய இளநீரையும் கொடுத்து, வெப்பம், தாகம், பசி அனைததையும் நீக்கி மகிழ் விக்கின்றன. அதனுல், பிறவியாகிய வெப்பத்தில் அகப்பட்டுப் பேரினப வேட்கையை உடையவராய் வருபவர்கட்கு அவ்வெப் பத்தை நீக்கி, வேட்கை தீரப் பேரின்பத்தை வழங்கும் இறை வனது திருவருள் போலவே திருப்பெருந்துறைத்தலமும் உள்ள தாம். தென்–அழகு. தென நன் பெருந்துறை–அழகிய நல்ல திருப்பெருந்துறை. "தென்னன" என்பதை, "பெருந்துறை யான்" எனபதன் பின் கூட்டுவதாயின, அதனை, 'தென ளுட்டில் விளங்குபவன்'என இறைவனுககு ஆக்கி உரைக்கலாம்.

'எங்கள் பெருமான், எளியவர்க்கு இரங்கும் பேரருளாளன்' என்பதற்கு, "அங்கணன்" என்ருள். அம்=அழகு. அம் கண்

ணன்-அழகிய கண்களை யுடையவன். கண்ணுக்கு அழகாவது, கருணையே. 'அங்கணன்' என்னும் இப்பெயர் சிவபிரானுக்கே உண்டு.

'அங்கணனுயிருக்கும் தனது தன்மைக்கேற்ப அவன் கொண்ட வடிவமும் அழகிய தட்பத்தை (குளிர்ச்சியை-கருணையை) உடையதாகவே இருந்தது' என்பாள், "அந்தணனுய்" என்ருள். அம்-அழகு. தணன்-தட்பத்தையுடையவன். "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும்-செந்தண்மை பூண்டொழுகலான்" என்ற பொதுமறையைக் காண்க.

அறைகூவி (வலிய அழைத்து) வீடு அருளினவன் சிவ பெருமானேயாயினும், அவனை நம்முன் கொணர்ந்தனவும், தன் சென்னியிலும், சிந்தையிலும் மலர்ந்துநின்றனவும், பாசத்தை எல்லாம் துடைத்துப் பேரின்பத்தைப் பொழிந்தனவும் அவனது திருவடிகளேயாதலின், 'அவற்றையே பாடுவோம்' என்பாள், "அறைகூவி வீடருளும்-அங்கருணை வார்கழலே பாடுதும்" என்ருள். காண, அசை. 'புற அழகை மாத்திரம் உடையன அல்ல, சிவபெருமானுடைய திருவடிகள்; அக அழகாகிய (உண்மை அழகாகிய) அருளையும் உடையன-அருளே வடிவாயின, என்றற்கு, 'அம் கழல்' என றுமட்டும் மொழியாது, "அம்கருணைக் கழல்" என்று கூறினுள்.

'எண்ணில்லாத துன்பங்களும், எல்லாத் துன்பங்கட்கும் காரணமான பிறப்பும், பிறப்பிற்குக் காரணமான பாசமும் ஆகிய பகைகள் அனைத்தையும் வென்று, பேரின்பத்தைத் தர வல்லவன் சிவபெருமான ஒருவனே' என்றற்கு அவனது பாதங்களை வேறு பெயராற் கூருது, 'கழல்' என்னும் பெயராற் கூறினுள். 'கழல்' என்பது, பகைவரை வெற்றி கண்ட வீரர்கள், அவ்வெற்றிக்கு அடையாளமாகத் தங்கள் காலில் அணியும் ஆபரணம். அஃது ஆகுபெயரால், பாதத்தைக் குறித்தல் வழக்கின் கண் உள்ளது. வார்-நீண்ட, காலில் கட்டப்படுதற்கு ஏற்ற வகையில் கழல் நீண்டிருக்கும்; அதனுல், அது, 'வார்கழல்' எனப்படுகின்றது.

'ஆடும் ஆட்டம் அம்மானையாதலின், அதற்கேற்ப நம்இறைவனைப் பாடும் பாட்டினையும் அம்மானைப் பாட்டாகப் பாடுவோம்' என்றற்கு, 'அம்மானுய்ப் பாடுதுங்காண்' என்றுகூறினுள்.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஆருந்தந்திரம் Tantra the Sixth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,

மலர் 18, இதழ் 7-ன் தொடர்ச்சி

ஞானகுருவே இறைவன்

The Holy Guru is God Himself

1. பத்திப்பணித்துப் பரவுமடி நல்கிச்
சுத்த வுரையால் துரிசறச் சோதித்துச்
சத்தும் அசத்துஞ் சதசத்துங் காட்டலாற்
சித்தம் இறையே சிவகுருவாமே.

He taught me the weekness of Spirit,
Infused in me the light of devotion,
He granted me then the grace of his feet;
And with interrogation pure, testing me entire,
He revealed to me the Real, the Unreal and the Real-
Of a certain is the Siva-Guru the Lord Himself. [Unreal;

பத்தி நெறியிலே என்னைப் பணிய வைத்தான்; திருவடி வழங்கி எனக்கு அருள் பாலித்தான்; தெய்வத்திருவாக்கால் என்னை மலநீங்கச் சோதித்தான். சத்து, அசத்து, சதசத்து- இவற்றின் உண்மையை விளக்கினான். எனவே என் சிவகுரு இறைவனே என்பது உறுதி.

வரி-3. சத்து-சிவம்.
அசத்து-பாசம்
சதசத்து-சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் ஆன்மா.

வரி-4 சித்தம்-முடிபு: உறுதி
சிவகுரு-பரமுத்தி அளிக்கும் ஞானவாசான்-மந்திரகுரு,
யோககுரு, தந்திரகுரு என்பவரினும் மேலோன்.

சற்குருவின் சந்நிதிப்பெருமை
Power of the Master's Presence

2. பாசத்தைக் கூட்டியே கட்டிப் பறித்திட்டு
நேசித்த காயம் விடுவித்து நேர்நேரே
கூசற்ற முத்தியிற் கூட்டலா நாட்டத்த
தாசற்ற சற்குரு அம்பலமாமே.

Gathering the strands of my fetters
He knotted them together and then wrenched them off;
Freeing me thus of my fond body
Straight to mukhti he hied me —
Behold, of such holy potent is the presence of the Master Divine!

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலப்பாசத் தளை களையும் இறுகக்கட்டி, வேரறப்பிடுங்கி, பற்றுமிகுந்த உடலினை அகற்றி, நேராக முத்தியல் சேர்க்க வல்லதாயுள்ளதே, தூய மெய்க்குருவின் சந்நிதி விலாசம்!

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் சிவபூசை செய்யும்போது தான் மூன்று அபராதங்களைச் செய்ததாகச் சொல்லி அதற்கு மன்னிப்புக் கோருகிறார்.

"உருவமற்ற உமக்கு உருவத்தைக் கல்பித்துத் தியானம் செய்துள்ளேன். உம்மை ஸ்தோத்ரம் செய்ததன் மூலம் உம்மிடமுள்ள வாக்குகளுக்கு எட்டாத தன்மையை விலக்கி விட்டேன். உம்மைத் தரிசிப்பதற்காகத் தீர்த்த யாத்திரை செய்த படியால் உம்முடைய ஸர்வ வியாபித்வத்தையும் அலக்ஷியம் செய்து விட்டேன. இந்த மூன்று அபராதங்களையும் பொறுத்துக் கொள்ள வேணும்"

ஸ்ரீ சங்கரக்ருபா – மலர் 9, இதழ் 1, பக்கம் 3.

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உரைநடை

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

(மலர் 18. இதழ் 7-ன் தொடர்ச்சி)

பெருவெளி முகடு திறந்திட் டண்டப்
பித்திகை வெடியாமே
பேரண் டத்துள வேதண் டங்கள்
பிதிர்ந்துதி ராகாமே
குருமணி சிதறிய வென்ன வுடுத்திரள்
கொட்டுண் டுதிராமே
குவடு படுந்திசை செவிடு படச்சிலர்
குடர்கள் குழம்பாமே
திருவிர லொடுநக கண்களி னுஞ்செங்
குருதி ததும்பாமே
சேயொளி நின்று துளும்பிட நின்சிறு
செங்கை வருந்தாமே
முருகலர் தாரவ னெருமுறை மெல்ல
முழக்குக சிறுபறையே
முத்தமிழ் பயில்பரு திப்பதி முருகன்
முழக்குக சிறுபறையே. 88

பெரிய ஆகாயமுகடு திறந்து அண்டச் சுவர் வெடித்து விடாமலும் பேரண்டங்களிலுள்ள மலைகள் பிதிர்ந்து உதிர்ந்து போகாமலும் நிறமுள்ள மணிகள் சிதறியதைப்போல உடுக்கூட்டங்கள் கொட்டி யுதிர்ந்து விடாமலும் மலைகளில் வாழ்வோர் திசைகள் செவிடு படுதலால் குடர்கள் குழம்பாதிருக்கவும், திருவிரல்களுடன் நகக்கண்களில் செங்குருதி ததும்பாதிருக்கவும், செவ்விய ஒளி தங்கித் துளும்ப உனது சிறிய செங்கைகள் வருந்தாமலிருக்கவும் மணம் விரிகின்ற மாலையைத் தரித்தவனே!

ஒரு முறை மெல்லச் சிறுபறையை முழக்கியருளுவாயாக! முத்தமிழும் பயலுகின்ற பருதித் தலத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானே! சிறுபறையை முழக்கியருளுவாயாக.

வம்மி னெனப்புல வோரை யழைத்திடு
வண்கொடை முரசமென
வடகலை தென்கலை யொடுபயி லுங்கவி
வாணர்க ளோடிவர
அம்மென் மடப்பிடி பொன்னுல கின்றவ
ணங்கை மணம்புணரும்
அணிகிளர் மணமுர சென்னவெ மையனெ
டம்மை மனங்குளிரத்
தெம்முனை சாயச் சமர்வினை யாடிச்
செங்கள வேள்விசெயும்
திறன்முர செனவிமை யவர்விழ வயரச்
செழுநகர் வீதிதொறும்
மும்முர சமுமதிர் காவிரி நாடன்
முழக்குக சிறுபறையே
முத்தமிழ் பயில்பரு திப்பதி முருகன்
முழக்குக சிறுபறையே. 89

புலவர்களை வாருங்கள் என்று அழைக்கின்ற வள்ளிய கொடைமுரசமெனவும், வடகலையைத் தென்கலையுடன் பயிலுகின்ற கவிவாணர்கள் ஓடி வருமாறு அழகிய மெல்லிய பெண் யானை போன்ற-பொன்னுலகில் தோன்றிய தெய்வயானையம்மையை மணம்புணரும் இன்பங் கிளருகின்ற மணமுரசமெனவும், எமது தலைவனுகிய சிவபெருமானுடன் உமையம்மை மனங் குளிரும்படி பகை முனைகள் கெடுமாறு போர் விளையாடி சிவந்த கள வேள்வியைச் செய்கின்ற வெற்றி முரசமெனவும் தேவர்கள் விழாக் கொண்டாடச் செழுமையான நகர வீதிகளிலெல்லாம் கொடைமுரசு, மணமுரசு, வெற்றிமுரசு ஆகிய மும்முரசமும் ஒலிக்கின்ற காவிரி நாட்டை யுடையவனே! சிறுபறையை முழக்கி யருளுவாயாக, முத்தமிழும் பயிலுகின்ற பருதித் தலத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானே! சிறுபறையை முழக்கியருளுவாயாக,

பெருகு சுவைத்தெளி நறவொழுகக்கனி கனியமுதே
பிடிநடைகற்றிட வடிகள்பெயர்த்திடு மடவனமே
கருவரைநெக்குட னுருகமிழற்றுமொர் கிளியரசே
கருணைசெயத்தகு மளியனிடத்தெனு மொழிபுகலா
அருளில்புனத்தவர் மகளிருபொற்பதம் வருடல்செயா
அவண்முனெடுத்துநின் முடியின்முடித்திடு கரமலரால்
பருவயிரப்புய சயிலன்முழக்குக சிறுபறையே
பருதிபுரச்சிறு குமரன்முழக்குக சிறுபறையே. 90

பெருகுகின்ற சுவையையுடைய தெளிந்த தேன் ஒழுகும் படி கனிந்த கனியமுதமே; பெண்யானைகள் நடைகற்கும்படி அடிகளை மெல்லப் பெயர்த்து வைக்கின்ற இளமையான அன்னமே, பெரிய மலைகளும் நெகிழ்ந்து உருகும்படி மழலை மொழி பேசுகின்ற ஒப்பற்ற கிளியரசே! அன்புடையவனுகிய என்னிடத்தில் நீ அருள் செய்வது தக்கதாகும் என்னும் மொழிகளைச் சொல்லி இரக்கமில்லாத குறவர் மகளாகிய வள்ளி நாயகியினது இரண்டு அழகிய பாதங்களையும் வருடி, அவற்றை அவள் முன்னே எடுத்து உனது முடியினமேல் சேரவைக்கினற கைம் மலர்களினல் பருத்த திணணிய தோள்மலையை யுடையவனே! சிறுபறையை முழக்கியருளுவாயாக. பருதி புரததில் எழுந்தருளியுள்ள சிறிய குமரப்பெருமானே! சிறுபறையை முழக்கியருளுவாயாக. —·— (தொடரும்)

பாம்பினும் கொடியவன்

(மலர் 18, இதழ் 7-ன் தொடர்ச்சி)

துன்பத்தை தரும் வலிய வினைகளையுடைய அடியேன் நைந்து உழல்கினறேன். ஐயனே! படம் எடுத்து ஆடுகினற நாகப் பாம்பை கொடியது எனக்கூறுவர், உலகோர். ஒரு காலத்தில அதற்கும் கருணை புரிந்தாய். எனக்கு மட்டும் நின அருள் கிட்டவில்லை. பாம்பிற்குள்ள தகுதி எனக்கு இல்லை அல்லவா? ஐயோ, நான் பாம்பினும் கொடியன ஆனேனே". மேற்கூறிய கருத்து பொதிந்த திருஅருட்பா பாடல கீழே உளளது.

பையார் பாம்பு கொடியதெனப் பகர்வாரதற்கும் பரிந்துமுன்னுள்
ஐயா கருணை யளித்தனை என்னளவில் இன்னும் அளிததிலையே
மையார் மிடற்றேய் ஆனந்த மனறில் நடிப்போய் வல்வினையேன்
நையா நின்றேன் ஐயோநான் பாம்பிற் கொடியன் ஆனேனே.

— இராமலிங்க அடிகள்,

நல்லந்துவனார்

வித்துவான். க. வா. சச்சிதானந்தம் அவர்கள்,
43. முருகப்ப முதலி தெரு,
சென்னை-7.

இவர் சங்ககாலப் புலவர். நற்றிணை என்ற நூலில் 88-ஆம் பாடலும், அகநானூற்றில் 43-ஆம் பாடலும், பரிபாடல் என்ற நூலில் 6, 8, 11, 20, ஆம் பாடல்களும், கலித்தொகை நூலில் நெய்தற்கலியும், திருவள்ளுவ மாலையில் 18-ஆம் பாடலும் இவர் பாடியன என்பர். இவர் மதுரையில் வாழ்ந்தவர்; ஆசிரியத்தொண்டு புரிந்தவர்; ஆதலினால் மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் என்று வழங்கப் பெற்றார். அந்துவன் என்பது இவரது இயற்பெயர். நல் அந்துவன் என்றே யாவராலும் சிறப்பித்துப் போற்றப்பெற்றார். பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் இவரைப்பற்றி

"அந்தணராதலின் ஆசிரியர் நல்லந்துவனார் எனப்பட்டார். ஆசிரியர் என அடைமொழி கொடுத்துக் கூறுவது அந்தணர்க்கேயன்றிப் பிறர்க்குக் கூறும் வழக்குப் பண்டில்லை," என்று எழுதியுள்ளார். ஆசிரியர் என்ற சொல் அந்தணர்க்கே யுண்டு என்று எங்கும் குறிப்பிடவில்லை. அப்படியிருக்க இவர் அவ்வாறு எழுதியது ஏன் என்பது புரியவில்லை. இளம் பாலாசிரியர், பாலாசிரியர், ஆசிரியர் என்ற சொற்கள் அவர்கள் ஆசிரியத் தொழிலைக் குறித்தே வந்தன. இளம் பாலாசிரியர் என்றும், பாலாசிரியர் என்றும், ஆசிரியர் என்று ஏன் வழங்கியனவோ? இக்காலத்தில் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆசிரியர்களை ஒத்தவர்களாகலாம். ஆகவே நல்லந்துவனாரும் ஆசிரியராயிருந்தமையால் ஆசிரியர் நல்லந்துவனார் என்று வழங்கப்பெற்றார் எனலாம். பாலாசிரியருக்குத் தம்பியாதல் குறித்தும் பாலாசிரியரினும் இளைஞர் ஆதல் குறித்தும் இளம் பாலாசிரியர் என்று வழங்கியிருக்கலாம்,

இவர் திருப்பரங் குன்றத்தைப் பற்றிப் பாடிய சிறப்பை நோக்கி வியந்தவர் மதுரை மருதனிளநாகனார் என்ற புலவர். அதனால் அவர் தாம் பாடிய அகப்பாட்டு ஒன்றில்

''சூர் மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
சீர்மிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை
யின்தீம் பைஞ்சுனை'' (அகம் 59)

என்று பாடினார். இதனால் நல்லந்துவனார் பாடிய பரி பாடற்பாட்டுக்குப் பின்னர் மருதனிளநாகனார் இவ்வகப் பாட்டைப் பாடினார் எனலாம். எனவே, 'மருதனிளநாகனார்க்கு முற் பட்டவரா நல்லந்துவனார்?' என்ற ஐயம் தோன்றலாம்.

புலவருள் ஒருவரைப் பற்றி மற்றொருவர் தம் பாடலில் பாடுவது என்றால் அவர் மிக்கசிறப்பு வாய்ந்தவராக இருக்க வேண்டும். நல்லந்துவனாரின் பரிபாடல் திருப்பரங்குன்றத்து எம்பெருமான் திருமுன்பு பலகால்பாடப்பட்டிருத்தல் வேண்டும். அப்பாடலும் எல்லாராலும் நன்கு அறியப்பட்டிருத்தல்வேண்டும். மருத்துவன் நல்லச்சுதனார் என்பவரால் பாலையாழ்ப் பண்ணிசையில் அமைத்துப் பாடப்பட்டது. அப்படிப் பல்லாண்டுகள் பாடப்பட்ட அதன் அருமை அறிந்தமையாலேதான் மருதனிள நாகனார் தம் பாடலில் 'அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை' என்றார். எனவே, அவர்க்கு முற்பட்டவராகலாம் நல்லந்துவனார் என்னலாம்.

இக்கொள்கை பின்வரும் செய்தியால் மறுக்கப்படும். நெய்தற்கலியைப் பாடிய நல்லந்துவனாரே, கலித்தொகைப் பாக்களைத் தொகுத்தார் என்பர். அக்கலித்தொகை பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை நெய்தல் என்னும் ஐந்து பிரிவுகளை யுடையது. அவற்றை முறையே பெருங்கடுங்கோன், கபிலர், மருதனிள நாகன், நல்லுருத்திரன், நல்லந்துவன் ஆகிய புலவர் பாடினர்.

'பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருத – மருஞ்சோழ
னல்லுருத்தி ரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி.'

என்ற பாட்டு அதனைத் தெரிவிக்கும். நெய்தற்கலிபாடிய நல்லந்துவனரே மற்றைய பாலை முதலிய கலிகளையும் தொகுத்தவர் என்பதை ஆசிரியர் நச்சினார்க்கினியர் வாக்கால் அறியலாம். 'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' (தொல்-பொருள்-அகம் 13.) என்ற நூற்பாவின் உரையில் சில கலித்தொகைப் பாக்களைப்பற்றிக் கூறியபோது "இதனைக் குறிஞ்சியுட்கோத்தார்; புணர்ச்சி யெதிர்ப்பாடாகலின்" என்றும், 'இவற்றை நெய்தலுட்கோத்தார்; சாக்காடு குறித்த இரங்கற் பொருட்டாகலின்", என்றும் "ஊடற் பகுதிய வாதலின் மருதத்துட்கோத்தார்", என்றும் 'பெருந்திணையாகலின் முல்லையுட் கோத்தார்', என்றும் கூறியிருத்தலை நோக்கின், கலித்தொகையை ஒருவரே தொகுத்தவர் ஆதலையறியலாம். தனித் தனிப் பாடல்களாகச் சிதைந்து கிடந்தனவற்றை யெல்லாம் ஆராய்ந்து திணைப்பிரிவுசெய்து தொகுத்தார் என்றும் அறியலாம்.

"முல்லை, குறிஞ்சி, மருத, நெய்தலெனச், சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" என்புழிச் சொல்லாத முறையாற் சொல்லவும் படுமென்றலின், இத்தொகையைப் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தலென இம்முறையே கோத்தார் நல்லந்துவனார்" என நச்சினார்க்கினியர் கலித்தொகை உரையிறுதியில் கூறியதையும் பார்க்கலாம். மருதனிளநாகனார் பாடிய மருதப் பாடல்களையும் ஆராய்ந்து தொகுத்தவர், நல்லந்துவனார் என்றால் மருதனிளநாகனாருக்குப் பிற்பட்டவர் இவர் எனல் வேண்டும்.

"அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை" என மருதனிள் நாகனார் பாடியதாலும், அவர் மருதப் பாடல்களை நல்லந்துவனார் தொகுத்ததாலும் இருவரும் ஒரே காலத்தவராகலாம் என்பதே நாம் துணிந்த முடிபாகக் கொள்ள இருக்கிறது.

இனி நம் நல்லந்துவனாருக்கு மழை, ஞாயிறு, கடல், குன்றம் ஆகியவற்றில் மதிப்பு மிக்கது என்று நினைக்கலாம். அவர் பாடல்களில் அவை எவ்வகையிலாவது சொல்லப் பட்டிருக்கும்.

"புணர்திரைக் கடல்விளை யமுதம் பெயற்கு ஏற்றாங்கு" என நற்றிணையிலும் (நற்-88) "கடல் முகந்து கொண்ட கமஞ்

ஆல் மாமழை .... தண்குரல் எழிலி''
(அகம் 43) என அகநானூற்றிலும் பரிபாடற் பாக்களிலும், பல நெய்தற்கலிப் பாக்களிலும் மழை முதலியவற்றைப் பற்றிக் கூறியிருத்தலைக் காணலாம். இவற்ருல் இப்பாக்கள் யாவற்றையும் பாடியவர் இவரே என்று அறுதியிட்டு உறுதி கூறவும் முடியும்.

கலிப்பாக்களைத் தொகுத்த நல்லந்துவனர் அகப்பாக்களையும் தொகுக்க முற்பட்டிருக்கலாம். அதற்குள் காலம் கடந்திருக்கலாம். எப்படியோ அகப்பாக்களிலும், நற்றிணைப் பாக்களிலும் இவர் பாடல்களும் ஒவ்வொன்றகப்பட்டது நம் தவப்பயனேயாம்.

SUPREMACY OF DHARMA

Sadhu Sudarsan

> Neither on account of lust, fear or greed nor even of danger to life should Dharma be given up.
>
> —Bharata Savitri

A virtuous King lived near Mathura.

As a result of his past karma, he became a leper.

Not all the Vaids and medicines of his country could cure him of his vile disease.

So much so the King became very dejected.

He decided to immolate himself by jumping into the Ganga and started to Prayag for the purpose.

Just at that time a new Vaid came to him.

Said he: "King! I have heard all about you, the treatments you have had, and your present decision. All that I ask you now is to defer your decision for a while and give me a chance to cure you; for I feel strongly that I can cure you."

The King was impressed with the Vaid's appearance and manners, so he relented.

Continued the Vaid: "King! I need for the treatment a live swan. Please arrange to procure one."

The King immediately sent for a hunter and ordered him to bring a live swan and added: "As it is needed for my treatment, be quick about it."

The hunter went straight out in search of a swan.

The above article is reproduced with the kind permission of the Editor of 'Bhavan's Journal',

A few days later he came across a swan couple on the waters of a lake. He was preparing to catch them; but the swans apparently scented danger and flew away.

The hunter could not sight any swan for some days after.

The King became impatient and, calling the hunter, thundered: "If you do not bring a live swan with in three days, I shall kill you along with your family!"

Hearing this threat, the hunter sent his companions in all directions in frantic search of a swan.

In the renewed search, however, the hunter could locate two swans on the shore of another lake.

To his surprise he saw a Vaishnava saint seated on the shore worshipping Hari. Those two swans sat near him without the least fear.

The hunter recalled how on a previous occasion he saw two swans and how even before he opened his hunting kit, they took to flight, while right before his eyes he could see them lolling near the sadhu fearlessly.

This gave the hunter an idea.

He also dressed himself like a Vaishnava sadhu in order to gain the confidence of the swans.

He put on garlands of Tulsi beads; painted his forehead and body with the marks of a Vaishnava; wore Tulsi leaves and advanced towards the swans.

At his approach, the male bird saw him by the corner of his eyes and said to his mate: "My dear! That rogue has disguised himself as a Vaishnava saint in order to catch us,"

Hearing it the female bird replied: "I agree that he comes to catch us. Even so, I feel we should not flee. I have a feeling that it was the same hunter who sighted us the other day seeing whom we took to flight. Today he has changed his strategy; seeing us unafraid in the presence of this devotee of Hari and, therefore, comes to us in the disguise of a Vaishnav. Whatever his motive, I for one would not like to falsify his faith that the utterance of Lord's Name or the assumption of the form of His devotee, achieves the impossible. It really does not matter if the man is disingenuous. His form is good enough. Even if it means my death, I should help to vindicate the potency of devotion to Hari. That being my cherished dharma, I should gladly welcome death at his hands. We should therefore not flee from him."

The male swan too agreed.

They did not fly away at the approach of the fake devotee.

The hunter neatly caught the male bird leaving its mate behind and carried it to the King.

Not being able to bear the separation from its partner, the female swan flew of its own accord and fell into the hands of the hunter, to his wonder. Reaching home, the hunter confined them in a cage which he later delivered the king.

At this the King felt extremely happy and calling the Vaid, handed him the two swans.

The Vaid too felt satisfaction as the birds were hefty.

Seeking the Queen, the Vaid told her: "Queen! You and the King please take your bath and after taking your food, both of you come here, I shall paint

the King's affected parts with the blood from the vein of this swan and give you an unction for application on the affected parts of the King four times a day. After treatment for three days in this manner, the King's disease will disappear!"

The Queen had hardly started following the directions of the Vaid when Lord Hari, the beloved of His devotees, came there in the form of a Brahmin Vaid.

Thought the Lord before coming: "The hunter aped my devotee's form. Knowing it to be hypocritical and dangerous, these two swans, of their own volition, have staked their lives, if only to uphold the dharma of devotion to me. I should be failing in my duty if I do not substantiate their faith by saving them."

The Lord carried a bottle of oil with Him.

Seeing Hari-Vaid, the King was fascinated.

Addressed the Brahmin-Vaid: "King! why do you have to kill these poor birds for providing a cure for your disease? I have in my hand a specially medicated oil and a mere daub of it on your body will make your vile disease disappear instantaneously. Take it and try."

Receiving the bottle from the King of Vaids, Hari, the King applied a little of it over his body and lo! at that very moment all the disfigurement on the King's body vanished, and he stood resplendent, shining like molten gold.

Everyone present was full throated in his praise for the new Vaidya-Brahmin, and the King fell at his feet, praying:

"O, King of Vaids! Adorations unto thee. My desire has been fulfilled. You have rescued me from the ocean of vile diseases."

The King offered the Brahmin-Vaid any amount of wealth in return for his services.

Replied the Brahmin-Vaid: "King! If you have no objection, you may give these two swans to me now. Whatever more you may want to give, you may send to my Guru" and mentioned the name of a real Vaidya. The King sent all the money to that address.

Lord Hari, on coming out, released the swans which expressed their gratefulness to Him who then returned to Vaikuntha.

In the meantime the hunter too had a transformation.

Argued he: "If my disguise as a devotee of Hari could draw the swans to me like the way it did, what infinite power should real devotion to the Lord fetch me?"

From that day, he gave up his cruel calling and rightaway plunged into chanting the Lord's Name.

In course of time he became a real saint.

Devotion to the Lord is our greatest dharma.

உலகத்தில் எல்லாவருத்தங்களும் சங்கடங்களும் விரோதங்களும் இந்த நான் என்பதின் உரிமைகளால் தான் ஏற்படுகின்றன. பிரபல ஆங்கிலப் பேராசிரியர் (H. G. Wells) எச். ஜி. வெல்ஸ் என்பவர் மனிதனின் உரிமை என்கிற பிரச்னையைக் கிளப்பி மகாத்மா காந்தியடிகளின் அபிப்பிராயத்தைக் கேட்டார். அதற்குப் பதில் காந்தியடிகள் "உங்கள் கேள்வியே தவறானது. மனிதனுக்கு உரிமைகளே கிடையாது, கடமைதான் உண்டு" என்கிறார்.

ஸ்ரீ சங்கரகருபா – மலர் 9, இதழ் 1, பக்கம் 6.

ஞானப்பழம்

புலவர், திரு. வே. அரசு அவர்கள்,
தமிழாசிரியர், எளச்சிபாளையம்.

உலகத்தின் முதலாய் நின்ற ஒருதனிப் பொருளே போற்றி கலைகட்கு முணர ஒண்ணுக் கருணைவாரிதியே போற்றி! மலை விற்கைப் பெருமான் கண்ணின் காந்தமா மணியே போற்றி! புலமைக்கும் தலைமை யான புண்ணியா! போற்றி! போற்றி! மெய்யன்பர்களே!

எப்பொழுதெல்லாம் தருமம் தாழ்ந்து அதருமம் பெருகு கிறதோ அப்பொழுதெல்லாம் என்னை நானே பிறப்பித்துக் கொள்கிறேன்.

யதா யதாஹி தர்மஸ்ய கலானிர் பவதி பாரத!
அப்யுத்தான மதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்!

—என்று கிருஷ்ண பரமாத்மா குருக்ஷேத்திரப் போர்க் களத் திலே அருச்சுனனைப் பார்த்துக் கூறுகிறுர். அல்லாமலும், உலகத்தில் நல்லவர்களைக் காப்பதற்கும், கெட்டவர்களை அழிப் பதற்கும், தருமத்தை நிலைநாட்டுவதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன்.

பரித்ரா ணுய சாதூனும் விநாசாய சதுஷ்க்ருதாம்
தர்மஸம்ஸ் தாப நார்த்தாய சம்பவாமி யுகே யுகே!

என்று அப்பகவானே பகவத்கீதையிலே சொல்லியுள்ளார்.

அந்த முறையிலே, எப்பொழுதெல்லாம் நேர்மை கெட்டு, ஒழுக்கம் பாழ்பட்டு, மக்கள் சீர்குலைகிறுர்களோ அப்பொழுதெல் லாம் இறைவன் பலவேறு உருவங்களில் உலகில் தோன்றித் தருமத்தை நிலைநாட்டுகிறுர்.

இவ்வாறு உலகில் அதருமத்தின் வளர்ச்சியும், தருமத்தின் தாழ்வும் பலமுறை ஏற்பட்டிருக்கின்றன.

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும் என்னும்
மருமத்தை" —நாமறியவே

—அஞ்ஞானிகளாகிய மக்கள் தெரிந்து கொள்ளவே—இராமனும், கிருஷ்ணனும், கந்தனும், கணேசனும் உலகிலே பிறக்க நேரிட்டது. கார்த்திகேயனும்—ஞானப்பழத்தைப் பிறர்க்கு வாரி வழங்கிய—தந்தைக்கும் ஞானரசத்தைப் பருகக்கொடுத்த—ஞானப்பழமாக விளங்குகின்ற முருகப்பெருமானும் உலகத்திலே தருமத்தை நிலைநாட்டுவதற்காகவே பிறந்தார்.

''ஆப்பிள்பழம் உண்டால் அத்தனையும் இரத்தம்'' —என்பார்கள், அதுபோல, முருகப்பெருமான், நன்கு முற்றி முதிர்ந்த செம்பழம். அத்தகைய ஞானப்பழம் பற்றிப்பேச வேண்டுமானால்—ஞானப்பழத்தின் தோற்றமும் சொல்லியாக வேண்டும்; இல்லாமல் முடியாது. எனவே, முருகப்பெருமானின் தோற்றத்தை முதலில் கூறத்தொடங்குவோம்.

ஞானப்பழம் என்னும் இனிமையான பெயரால் முருகப்பெருமான் அழைக்கப்படுகிறார். அருணகிரிநாதர், இறைவன் முருகனை ஞானபண்டித சாமி என்றும் ஞானபண்டித நாதா என்றும் அழைப்பார்; ஞானமொழிபேசும் ஒரு முகத்தை வேண்டுவார்; ஞானத்தேனமுதை வாரி வழங்குமாறு கேட்பார். அவர் ''நீயே நானாக இருக்கின்ற'' -''நீயான ஞான விநோதந்தனை என்று நீ அருள்வாய்''- என்று கேட்கின்றார்.

நாதவிந்து கலாதீ நமோநம
வேத மந்த்ர சொருபா நமோநம
ஞானபண்டித சாமி நமோநம வெகுகோடி
நாமசம்பு குமாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாகபந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதி நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்!

அருணகிரியார் பாடலைத் தொடங்கிப் பாட ஆரம்பித்த உடனேயே, ஞானபண்டித சாமி என்று அழைக்கின்றார். இன்னொரு பாடலிலே,

வேத மந்த்ர சொருபா நமோநம
ஞானபண்டித நாதா நமோநம
வீரகண்டைகொள் தாளா நமோநம அழகான
மேனி தங்கிய வேளே நமோநம
வான பைந்தொடி வாழ்வே நமோநம
வீறுகொண்ட விசாகா நமோநம அருள்தாராய்

என்று அழைக்கின்றார்.

ஞானபண்டிதசாமி, ஞானபண்டிதநாதன், ஞானப் பழமாகிய முருகப் பெருமான் அசுரர்களை அழித்து நல்லோர்க்கு நலமருள, தேவர்க்கு வாழ்வருளப் பூமியில் தோன்றினார்.

பாடும்சீர் ஆவினன் குடிமுதல்
ஏரகம் சீரலைவாய் அன்பர்
தேடும்நல் செருத்தணி பரங்குன்றம்
பழமுதிர் சோலையு மெல்லாம்
நாடுமுன் அடியரை நமனணுகான்
எனவந்து துன்பங்கள் தொடர்ந்தால்
நீடுபுகழ்ச் செங்கோடைக் குமரனே
நீயிருக்க நானேன்அஞ் சுவனே!

அன்புடைப் பெருமக்களே!

கந்தபுராணம் நம் சொந்தபுராணம். அந்நூலில் ஸ்ரீ ஆறுமுகப் பெருமானின் அருட்சிறப்புக்களெல்லாம் பொதிந்துள்ளன.

இளையா யழகியா யேறூர்ந்தா னேறே
உளையாயென் னுள்ளத் துறை–

என்று பக்தர்கள் கேட்பார்கள்; வேண்டுவார்கள்.

கந்தபுராணக் கதைக்கு ஆழ்ந்த தத்துவப் பொருளுண்டு. பக்தி, விசுவாசம், ஞானநெறி, உண்மை, இரக்கம்; அன்பு, அகத்தூய்மை, அச்சமின்மை, செருக்கின்மை, புலனடக்கம் என்பன தேவசம்பத்துகள்.

செருக்கு, சினம், கொடுமை, பொய்ம்மை, ஒழுக்கமின்மை, இரக்கமின்மை, பொறாமை, அறியாமை-இவை அசுரசம்பத்துகள்.

(தொடரும்)

காஞ்சி ஞானப்பிரகாசர் திரு மட முதல்வர் தவத்திரு ஞானப் பிரகாச தேசிக பரமாச்சாரிய அடிகளார் அவர்கள் அவிநாசி விஜயம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் 14—6—67 முதல் 9—7—67 முடிய 27 நாட்கள் அவிநாசியில் முகாம் செய்து 'சிவஞானபோதம்' என்னும் சாத்திர நூல்ப்பாடம் சொன்னார்கள். நாடோறும் வகுப்பில் 50 பேருக்கு மேல் கலந்து பாடம் கேட்டுப் பயன் பெற்றனர். வகுப்பு நாடோறும் இரவு எட்டு மணி முதல் 10 மணி வரை நடைபெற்றது 'சிவஞானபோத' வகுப்பு நிறைவு விழா' 9—7—67 அன்று அவிநாசிச் சிவபெருமான் திருக்கோயிலில் நடைபெற்றது. காலையில் சுவாமி களிடம் புன்செய்ப்புளியம்பட்டி அன்பர்கள் 16 பேரும், அவிநாசி யன்பர்கள் 14 பேரும் சமயதீக்கை பெற்றுக் கொண்டனர். பிற்பகல் 5 மணிக்கு அவிநாசியப்பர் திருக்கோயிலில், சுவாமிகள் அருளுரை வழங்கினர். இரவு 10 மணிக்கு விழா இனிதே நிறைவேறியது.

இராகம்: ஜெகன்மோகினி　　　　　　தாளம்: ருபகம்

பல்லவி

ஆதரி தயாபரி
கீத மயமானவளே　　　　(ஆதரி)

அனுபல்லவி

ஆதி ஜெகன்மோகினியே
அபயம் தந்திடுவாய்　　　　(ஆதரி)

சரணங்கள்

1) வேதங்கள் போற்றிவரும்
வர தாயகியே துதித்தேன்
நாத ஸ்வரூபமான
நாயகியே நம்பினேனே　　　　(ஆதரி)

2) பாதகம் பல புரிந்தேன்
பாவியாக நான் திரிந்தேன்
மாதா மகேஸ்வரியே
மனமுவந்து அருள்வாயே　　　　(ஆதரி)

3) அனுதினமும் உனைத்துதி
செய்தேன் அருள் புரிந்திடுவாய்
கனவிலுமே நான் மறவேன்
காத்தருள்வாய் கருணைபுரி　　　　(ஆதரி)

வி. கே. முத்தையா பிள்ளை பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

தொண்டை மண்டலாதீனம் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலய குருமஹா சந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள் அருளிய

சிறப்புச் செய்யுள்

மகராச மாணிக்கம் பிள்ளையெனப் புலவரெலாம்
வழங்குஞ் சீரான்
நிகராவ ரொருவரும்இங் கிலரெனவே நிலவுமிசை
நீண்ட செல்வன்
சுகராதி முநிவரெனத் தனையுந்தன் றலைவனையுந்
துணிந்த நல்லோன்
பகராறு பத்தொடுமூன் றும்அடியர் போற்றகவல்
பாடி னனே.

தொல்காப்பி யம்பழைய தூயதமிழ் நூல்களெலாந்
துருவி யோர்ந்த
பல்காப்பி யப்புலமைப் பெருக்கொடுசொற் பொருள்வளங்கொள்
பாடல் வல்லோன்
ஒல்காப்பி ரியக்கொடையன் உயர்ந்தோர்க்கெல் லாந்துணைவன்
உள்ளத் தூயன்
அல்காப்பி ரானடிக்கே அகத்தையிட மாத்தருமெய்
யன்பன் வாழ்க.

திருத்தொண்டர் போற்றித் திருவகவல்

திருச்சிற்றம்பலம்

விநாயகர்துதி

காப்புவெண்பா

திருத்தொண்டர் போற்றித் திருவகவல் பாடத்
திருத் தமிழ்ச்சொல் நாவொலிக்கச் செய்யும்-பெருத்த
வயிறுடையான் மெய்ஞ்ஞான வாழ்வுடையான் நீண்ட
கயிறுடையான் செம்பொற் கழல்

காப்பு-ஆசிரியப்பா

1 நல்லார் தமிழ்மறை நம்பிக் குரைத்த
பொல்லாப் பிள்ளையார் பொன்னடி காப்பே

2 திருத்தொண் டத்தொகை செய்தவா ரூரர்
திருத்தண் டமிழ்மலர்ச் சேவடி காப்பே

3 வெம்பு மடியார் வீடுறச் சரிதைசொல்
நம்பி யாண்டார் நல்லடி காப்பே

4 தூக்கிய திருவடி துதிக்கும் குன்றையார்
சேக்கிழார் நாயனுர் திருவடி காப்பே.

நூல்

1 தில்லை யம்பலத் திருநடந் தொழுஞ்சீர்த்
தில்லை யந்தணர் திருவடி போற்றி

2 திருவினு நல்ல மனைவியைத் தீண்டார்த்
திருநீல கண்டர் தெருளடி போற்றி

3 மயற்பகை முனிக்கே மனைவியை யளித்த
இயற்பகை முனிவர் இணையடி போற்றி

4 முளைகொண் டமுது முடித்தஇல் லறத்தார்
இளையான் குடியார் எழிலடி போற்றி

5 தத்தா நமரெனச் சாற்றியன் ருனையும்
வித்தார் மெய்ப்பொருள் வீறடி போற்றி

6 இறகொன்று சூடியும் இச்சுந் தரனும்
புறகென் விறன்மிண்டர் பொன்னடி போற்றி

7 அமர்மனை மகனெடும் அருந்துலை யேறி
அமரமர் நீதியார் அடியிணை போற்றி

8 பறித்த யானையைப் பாகரொடு மாய்த்த
எறிபத்த நாயனுர் ஏரடி போற்றி

9 ஈனனதி சூரனுக் கின்னுயி ரீந்த
ஏனுதி நாயனுர் இலகடி போற்றி

10 கண்ணிடந் தப்பிய காளத்தி வேடனுர்
கண்ணப்ப நாயனுர் கழலடி போற்றி

11 குங்கிலி யம்பெறக் குணவதி தாலியைச்
செங்கையால் விற்றேர் திரவடி போற்றி

12 ஊனமில் மகளின் ஒருமுடி கொடுத்த
மானக்கஞ் சாறர் மலரடி போற்றி

13 அரிவா ளாற்றலை யரியத் துணிந்த
அரிவாட் டாயர் அளியடி போற்றி

14 தேனார் குழலிலைந் தெழுத்துஞ் சேர்த்திசை
ஆனாய நாயனார் அருளடி போற்றி

15 சீர்த்தியாய் மும்மையால் சீருல காண்ட
மூர்த்தி நாயனார் முகிலடி போற்றி

16 முருகார் மாலைகள் முதல்வர்க் கணிந்த
முருக நாயனார் முருகடி போற்றி

17 உள்ள முருகி உருத்திரம் பாடிய
வள்ளல் பசுபதி மாவடி போற்றி

18 காளை யேறியோர்கழலடி காண
நாளைப் போவார் வாளடி போற்றி

19 அறுவை யொலித்தே அடியவர்க் களிதிருக்
குறிப்புத் தொண்டர் குரைகழல் போற்றி

20 கண்டே தந்தையின் காற்கண் வெட்டிய
சண்டே சுரனார் தாண்மலர் போற்றி

21 தேவுக் கரசர் திருவடி துதிக்கும்
நாவுக் கரசர் நறைமலர் போற்றி

22 நலத்தகு பாண்டியன் நயனுடை யமைச்சர்
குலச்சிறை நாயனார் குலவடி போற்றி

23 அருமையின் மிக்க அட்டமா சித்தராம்
பெருமிழ லைப்பிரான் பிறங்கடி போற்றி

24 ஆலங் காட்டில் அருள்நடங் கண்ட
சீலப் பேயார் சேவடி போற்றி

25 அப்புநற் பந்தர் அமைத்த தொண்டர்
அப்பூதி யடிகள் அணிகழல் போற்றி

26 சீல மனைவியைச் சிலம்பியால் துறந்த
நீல நக்கர் நீளடி போற்றி

27 நீர்நிறைத் தெழில்விளக் கேற்றிய நின்மலன்
சீர்நமி நந்தி தெருளடி போற்றி

28 வானவர் குழந்தை வண்டமிழ் வேந்தர்
ஞானசம் பந்தர் நல்லடி போற்றி

29 மான்கரன் தூதினை மறுத்த ஏயர்
கோன்கலிக் காமர் வான்கழல் போற்றி

30 ஞால முய்ய நானெறி யுரைதிரு
மூல நாயனார் முளரிகள் போற்றி

31 கண்டெரி வின்றியும் தண்குளம் தொட்ட
தண்டி யடிகள் தாமரை போற்றி

32 தொண்டர் அமுதுணச் சூதும் ஆடிய
தொண்டர் மூர்க்கர் துணையடி போற்றி

33 சுந்தரர் நண்பர் சோமாசி மாறர்
ஐந்தெழுத் தோதுவார் அருளடி போற்றி

34 கனிவுடன் நாடொறும் கன்மலர் சாத்திய
முனிவரர் சாக்கியர் மொய்கழல் போற்றி

35 சிறக்க வேள்விகள் செய்த அந்தணர்
சிறப்புலி நாயனார் சீரடி போற்றி

36 கறுத்த பயிரவர் கருத்தறிந் தரிந்த
சிறுத்தொண்ட னார்செந் திருவடி போற்றி

37 அழனிறன் சிலம்பொலி அமுதங் கேட்கும்
கழறிற் றறிவார் கழலடி போற்றி

38 பார்புகழ் பஃறிருப் பணியினில் மகிழ்பவர்
ஏர்கண நாதர் எழிலடி போற்றி

39 தோடார் செவியன் துணையடி சுமந்து
நாடாள் கூற்றுவர் நாடடி போற்றி

40 துய்யவே தாந்தச் சொன்மலை ஆய்ந்த
பொய்யடி மையிலார் புகழடி போற்றி

41 எறிபத் தரிடம் என்னையும் கொல்கெனும்
நெறிபுகழ்ச் சோழர் நிலையடி போற்றி

42 அரும்பசும் பொன்னூ றதிகம் அளித்த
நரசிங்க முனையர் பரவடி போற்றி

43 தினத்துக் கொருமின் சிவனார்க் கிட்டநன்
மனத்ததி பத்தர் கனத்ததாள் போற்றி

44 சீர்வளர் மனைவியின் செங்கை தறித்த
கார்வளர் கைக்கலிக் கம்பர்தாள் போற்றி

45 உதிரங் கொண்டே ஒளிவிளக் கேற்றும்
மதியினர் கலியர் மாணடி போற்றி

46 தீங்கு சொற்ற திருவிலார் நாவினை
வாங்கிய சத்தியார் வண்கழல் போற்றி

47 மெய்யனு பவக்கவி விளம்பிடு மரசர்
ஐயடிகள் காடவர் ஐயடி போற்றி

48 சீர்சிகை எரித்த சிவன்பெரும் பத்தர்
ஏர்கணம் புல்லர் இசையடி போற்றி

49 காரிக் கோவை கழறிய முத்தர்
காரி நாயனர் கவினடி போற்றி

50 மங்கையர்க் கரசி மணாளர் சிவநெறி
நின்றசீர் நெடுமா றன்னடி போற்றி

51 தாயிலார் தமையக மனக் கோயிலுள் அமர்த்திய பூசைசெய்
வாயிலார் நாயனர் தாயடி போற்றி

52 வினையடு வார்நல் விருந்திடு வார்போர்
முனையடு வார்அளி மொய்கழல் போற்றி

53 பூவினை எடுத்தவள் பூங்கை துணித்த
சீர்கழற் சிங்கர் தேவடி போற்றி

54 இடங்கழி கென்றெப் பொருளையும் வீசும்
இடங்கழி நாயனர் இலகடி போற்றி

55 அரும்பெருந் தலைவி அரசியின் மூக்கை
அரிசெருத் துணையார் அரும்பதம் போற்றி

56 அகம்படி மையின லரும்பொன் பெற்ற
புகழ்த்துணை நாயனர் பூவடி போற்றி

57 இறைவனெல் லெடுத்த உறவினர் உறுப்பைக்
குறைத்தகோட் புலியார் குரைகழல் போற்றி

58 மெய்த்தவ வொழுக்கமும் வேடமுமுறுமெய்ப்
பத்தராய்ப் பணிவார் பதமலர் போற்றி

59 வரமனும் திருவாய் மலர்ந்தபோ தெல்லாம்
பரமனையே பாடுவார் பதாம்புயம் போற்றி

60 சித்த முழுதும் சிவன்பால் வைத்தபல்
மெய்த்திருத் தொண்டர் மெய்யடி போற்றி

61 ஏருர் கயிலையி லெழுசிவ கணம்எனும்
ஆருர்ப் பிறந்தார் அணியடி போற்றி

62 முப்போ துந்திரு மேனி தீண்டுவார்
ஒப்போ தருஞ்சீர் உறுங்கழல் போற்றி

63 முழுநீ றுபூசிய முனிவர் எம்மனோர்
வழுவார் பிறவி ஒழியடி போற்றி

64 எப்பால் உலகில் எவரடி யார்கள்
அப்பால் அடியார் அமுதடி போற்றி

65 நேசமாய் உளத்தில் நெடுந்தளி கட்டிய
பூசலார் நாயனர் தேசடி போற்றி

66 மங்கல மதுரை மாபெருந் தேவி
மங்கையர்க் கரசியார் மணியடி போற்றி

67 ஆசை உடையர னன்பர்க் குடையளி
நேச நாயனர் நிதியடி போற்றி

68 பொங்கெழில் மாடக் கோயில்கள் புனைந்தகோச்
செங்கட் சோழர் செல்லடி போற்றி

69 பாலசம் பந்தரின் பதிகமோடி யாழ்பயில்
நீல கண்டயாழ்ப் பாணர்தாள் போற்றி

70 விடையவர் தோழரை வியப்புறப் பெற்ற
சடைய நாயனர் கொடையடி போற்றி

71 இசைமிகு சுந்தர மூர்த்தியை ஈந்தருள்
இசைஞானி யம்மையார் இன்னடி போற்றி

72 எம்பிரான் அடியார்க் கடியனுய் இலங்கிய
தம்பிரான் தோழர் தயாவடி போற்றி

73 மயிலை இடப்புறம் வைத்தமா யோகி
கயிலை யடியார் கழலடி போற்றி

திருச்சிற்றம்பலம்

திரு. P. N. இராஜமாணிக்கம் அவர்கள்,
பாண்டிச்சேரி.

'ஆடிப் பெருக்கு'

புலவர். வி. சொக்கலிங்கம் அவர்கள்,
தமிழ்த்துறை ஆய்வாளர்,
சரசுவதிமகால், தஞ்சாவூர்,

'ஆடிப்பட்டம் தேடி விதை' என்பது பழமொழி. ஆடி மாதம் பிறந்து விட்டால் சைவக் குடும்பங்களுக்கு 'சுத்தமாம் சுவாதி நாளில் சுந்தரர் கைலை சேர்ந்த' நினைவு வரும். பிள்ளை களுக்கும் பெண்களுக்கும் 'ஆடிப்பெருக்கு' என்னும் 'பதினெட் டாம் பெருக்கு' நினைவு வரும். இப்பதினெட்டாம் பெருக்குக்கு ஒரு பெருஞ்சிறப்பு உண்டு.

கல்லிடைப் பிறந்து போந்த வெள்ளம் ஆனி மாதத்தில் பொன்னி, பொருநை, முதலான ஆறுகளில் பெருக்கெடுத்து வரும். 'ஆனியில் வெள்ளம் வந்தது' என்றவுடனே, மதுரையில் மாணிக்கவாசகர் பொருட்டு மக விண்மீன் கூடிய நாளில் வைகையாறு உடைப்பெடுத்ததும், வந்திக்காக சொக்கலிங்கப் பெருமான் பிட்டுக்கு மண் சுமந்ததும் நினைவுக்கு வரும். நிற்க, அதுவரை வெப்பத்தால் காய்ந்து கிடந்த வயல்களிலும் வயலைச் சார்ந்த இடங்களிலும் அப்புதுப் புனல் வெள்ளத்தினைப் பாய்ச் சுவர். உழவர்கள் வயல்களில் உழுதொழிலை மேற்கொள்வர். மற்றவர்கள் வயலைச் சார்ந்த இடங்களில் காய்கனித் தோட்டம் அமைத்தல் முதலான செயல்களை மேற்கொள்வர். குடிதண் ணிருக்கு அதுவரை துன்பம் அடைந்து வந்த பெண்டிரும் பெரிதும் மகிழ்ச்சியடைவர். இவ்வாறு யாவருக்கும் மகிழ்ச்சியை யூட்டுவது இப்புதுப்புனல் வெள்ளம்.

'நிழலருமை வெய்யிலில் தெரியும்' என்பது பழமொழி. அதுபோலத் தண்ணீர் அருமை கோடையில் தெரிந்தது. தண்ணீர் கிடைக்காத இக்காலத்தில் தண்ணீரைச் சிக்கனமாகச் செலவு செய்வர். ஆற்றில் தண்ணீர் வந்ததும் சற்று தாராள

மாகச் செலவு செய்து பயனடைவர். அப்படிப் பயனடைந் தவர்கள் அதற்கு நன்றி சொல்ல முற்பட்டனர். தமிழர்கள் என்றும் செய்நன்றி யுடையவர்கள்.

சூரபன்மாவின் கொடுஞ்செயலினுல் இந்திரன் முதலான தேவர்கள் துன்பம் அடைந்தார்கள். சிவனருளால் முருகப் பெருமான் தோன்றி சூரனை வதைத்துத் தேவர்களைச் சிறைமீட்டி இந்திரனுக்கு முடிசூட்டினுர். அதனுல் முருகனுக்கு நன்றி செலுத்துமுகத்தான் இந்திரன் தனது மகள் தெய்வயானையை முருகனுக்கு மணம்புரிவித்தான் என்று கூறுவது கந்தபுராணம்.

உழைப்பால் பெற்ற செந்நெல்களை வீடு சேர்த்த மக்கள் தைத்திங்கள் முதலாம் நாள் பொங்கலிட்டு ஞாயிறு எனப்படும் சூரியனுக்குப் படைத்து வணங்குகின்றனர். மக்களுக்குத் தண் ணீர் வேண்டும். அது மழைமூலம் நமக்குக் கிடைக்கின்றது. அதற்கு சூரியவெப்பம் வேண்டும். அதற்குக் கடவுள் ஆதவன். ஆகவே பொங்கலன்று ஞாயிறுக்கு நன்றி சொல்லுகிருன்.

பொங்கலன்று ஒரு சிறு செயல் நடக்கும். அதனைப் பல ரும் கவனிப்பதில்லை. பொங்கலிட்ட அடுப்பிற்குச் சோறூட்டி நன்றி கூறுவதே அதுவாகும். புதிதாக இட்டுப் பொங்கலிட்ட இரண்டு அடுப்புகளுக்கு முன்னும் இரண்டு இலைகளிட்டுப் பொங்கல் வைத்துத் தேங்காய் உடைத்துப் பழம் வெற்றிலை பாக்கு வைத்துச் சூடமேற்றி வழிபடுவர். அதன் பின் சர்க்கரைப் பொங்கலில் கொஞ்சமும், வெண்பொங்கலில் கொஞ்சமும்எடுத்து இரண்டு அடுப்புகளிலும் அப்பிவிட்டுத்தான் பிறகு பொங்கல் சாப்பிடுவர். வேடிக்கையாயினும் கருத்துண்டு. பொங்கலைச் சமைப்பதற்கு உறுதுணையாக இருந்து ஆக்கித்தந்ததால் அடுப் புக்கு நன்றி சொல்லுகிருன், தமிழன். இவன் இவ்வாறு செய்யா விடில் அடுப்பு கோபித்துக் கொண்டு ‘ஏ தமிழா! நீ எனக்கு நன்றி சொல்லவில்லை; இனிநான் உனக்குத் துணைசெய்யமாட் டேன்’ என்று மாயமாய்ப் பறந்து போய்விடாது. இப்படி அசையாப் பொருளுக்கு நன்றி சொல்லுகிருன். அசையும் பொரு ளாகிய மாடுகளுக்கு நம்முடனுழைத்த நன்றிக் கறிகுறியாக அம்மறுநாளே மாட்டுப் பொங்கலிட்டு, அவைகளை அன்று ஒரு நாள் சுதந்திரமாக அவிழ்த்து விட்டு நன்றி தெரிவிக்கின்ருன்.

இவ்வாறெல்லாம் நன்றி சொல்லும் தமிழன் மனிதர்களுக்கு நன்றி சொல்லாது விடுவானு?

இந்த அடிப்படையில் எழுந்த விழாவே 'ஆடிப் பெருக்கு'. நெல் விளைச்சலுக்கும், மற்றைத் தானிய காய்கனி முதலான வற்றின் விளைச்சலுக்கும் துணைபுரிவது தண்ணீர். ஆற்றில் வந்த தண்ணீரை வயலுக்குப் பாய்ச்சியவுடன் 'நல்லேர் கட்டும் விழா' நிகழும். அதுகாலை பூசை செய்து வழிபடுவது வயலுக்கும், ஏர், கலப்பை முதலானவைகளுக்கும் நன்றி சொல்வதற்காகவே யாகும்.

புதுப்புனல் முதன்முதலாக ஆற்றில் வரும்போதே ஆற்றங் கரையோரத்திலுள்ள மக்கள் தங்கள் பகுதிகளில் தண்ணீர் வரும்போது தேங்காயுடைத்துச் சூடமேற்றி வணங்கி நன்றி செலுத்துவர். மண்ணினைப் 'பூமிதேவி' என்றும், விண்ணினை 'ஆகாயவாணி' என்றும் பெண்பாலாகக் கருதிய மக்கள் தண்ணீரையும் 'காவிரித்தாய்' என்றனர். தீபாவளியன்று வீட்டிலேயே குழாயடியில் நீராடியவர்களையும் 'கங்கா ஸ்நானம் ஆச்சா?' என்று கேட்பது போலே, எந்த ஆற்றுக்குப் போய் நீராடி வந்தாலும் 'காவிரிக்குப் போய் வந்தீர்களா?' என்று கேட்பது தமிழக வழக்கு. அதன்மூலம் காவிரிக்குச் சிறப்புக் கொடுத்து அதனைத் தெய்வமாகக் கருதினர்.

ஆடித்திங்கள் பதினெட்டாம் நாள் கட்டுக் கழுத்தியர் களும், பிள்ளைகளும், புதுமணமக்களும் நீராடிக் கோடியுடுத்து அணிகளணிந்து ஆற்றங்கரையில் விழவெடுப்பர். பத்துப் பன்னிருவர் கூடி ஆற்றின் நடுவில் மணலெடுத்து ஈரத்தோடு குவித்துவைத்து, அதற்கு மஞ்சள் குங்குமம், சாற்றி மலரிட்டு, காதோலை, கருவளையல், கருமணி, மணப்பொருள்கள் முதலானவைகளை வைத்து, பச்சரிசியில், பாசிப்பருப்பு வெல்லம், பொட்டுக்கடலை, எள், ஏலம் முதலானவைகளைச் சேர்த்து வைத்துத் தேங்காயுடைத்துச் சூடமேற்றி வணங்குவர். வணங்கிய பின் கட்டுக்கழுத்தியர் ஒருவருக்கொருவர் கழுத்தில் மஞ்சள் கயிற்றினைக் கட்டுவர். அப்படிக் கட்டிய கயிறுகள் ஒவ்வொருவர் கழுத்திலும் நிரம்ப இருக்கும், பெண்கள் பல்லாண்டுகாலம் கணவனோடு வாழவேண்டுமென்ற எண்ணத்தினை வெளிப்படுத்

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

ஏற்றருள்வாய்!

திரு. இரா. துரைசாமி அவர்கள்,
நிறைநிலை, செந்தமிழ்க்கல்லூரி,
திருப்பனந்தாள்.

அடியார்கள் சிந்திக்கும் உருவில் வந்து
ஆட்கொள்ளும் பெருமானே குமரா! உன்னை
துடிக்கின்ற இதயத்தால் துணையாய் ஏற்றேன்
துதிபாடிப் பிறவிதனை விரட்ட லுற்றேன்
கடிகாவாம் உன்னுள்ளச் சோலை புக்கு
களித்திருக்க அருளாயோ கந்தா! இன்பப்
படிப்பினையை என்சிந்தைக் கேற்றி வைத்து
பரம்பொருளே கடைக்கணித்த ருள்செய் வாயே!
பொன்பொருள்கள் இவ்வுலகில் தேவை யில்லை
புதுப்பதவி மண்ணாசை எனக்கு வேண்டாம்
என்னுயிரை உன்னிடத்து ஒப்ப டைத்தேன்
எப்படியோ என்செய்தோ நற்கதிக்கு
முன்னேற்றி வைத்தருள்வாய் முருகா! ஞால
முதற்பொருளே வேலவனே கந்தா! நன்மைக்(கு)
இன்னமுமேன் தயங்குகின்றாய் விரைவில் வந்து
ஏற்றருள்வாய் உன்னழகு வதனம் காட்டி.

(முன் பக்கத்தொடர்ச்சி)

தும் செயல் இது. புதுமணப் பெண்களுக்கு அன்று தாலி பிரித்துக் கட்டுவர்.

உட்பொருள் கருதாத மக்கள்சிலர் அன்று 'பழஞ்சுவடிகளை ஆற்றில் விடுவது' என்ற மூட நம்பிக்கையில் மூழ்கி இன்றும் பல அரிய பெரிய நூல்களை அழித்து வருகின்றனர். அதனைத் தடுத்தல் வேண்டும். பழங்கால ஏட்டுச் சுவடிகளைத் தஞ்சை அரண்மனை சரசுவதி மகாலில் சேர்த்தால் மக்கள் பயனடைவர்.

'ஆனி ஆடி, கூனி குடிபோகாதே' என்பர். ஆராயுங்கால் 'புகும் வீடு பகை' என்பது சோதிடம் போலும். புதுப்புனலால் பூரிக்கும் இம்மாதத்திற்கு ஏனோ இப்படியொரு இழிசொல்.

ஆகவே தண்ணீருக்கு நன்றி செலுத்துதலின் அடிப்படையில் அமைந்த சிறப்பினை உடையதே 'ஆடிப் பெருக்கு'.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

அதிசயப்பத்து

இனி, அதிசயப் பத்தாவன:

பொழிப்புரை:— முற்பதிகத்தில் அருளிய அன்பு நேச முடன் கழிந்ததற் கிரங்கி, நன்றி யறிந்து, நயந்து, அதிசயித்த வன்பால் இரங்கிய சிவானந்த சிவானுபவ சுவானுபூதிகம்.

அதிசயத் திருப்பா ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையில் ஓதியதெனக் காண்க.

426. இனி, திருவடி ஞானம் அடியாரிற் கூட்டிய (தி. – ன.) :—

வைப்புமா டென்று மாணிக்கத் தொளியென்று மனத்திடை யுருகாதே
செப்பு நேர்முலை மடவர லியர்தங்கள் திறத்திடை நைவேனை
ஒப்பி லாதன வுவமனி லிறந்தன வொண்மலர்த் திருபாதத்
தப்ப னண்டுதன் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

(இ – ள்). சீரடியார்களே! கேண்மோ! அடியேன் ஆண்டவனுன நாதனை எனதுயிர் வைப்பான திருவருட் செல்வமென்றும், என்னறிவு விளங்கும் இரத்தினப் பிரகாசமென்றும், என் மனம் உருகாதபடி, செப்புப்போலும் தனமுடைய பெண்கள் நலத்திலே உருகி இன்பப்படும் பாவியை, ஒப்புவமைக்கு அளவிடப்படாத ஒள்ளிய செங்கமலப் பொற்பாதனெனதப்பன், என்னை அறிவுளனுகத் தன் திருக்கூட்டத்தில் பணிசெய அருளிய அதிசயம் கண்டீர்களே! அவ்வன்பை எவ்வகை சொல்வேன் என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை–திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 18, இதழ் 7-ன் தொடர்ச்சி]

IV

MANIKKA VASAHAR

(Sanskrit form MANIKYA VACHAKA)

82. நாடத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரை
கின்றே
னூடகச்சீர் மணிக்குன்றே யிடையரு வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடை
யானே.

82. Though like Thy saints I seem, 'tis but the acting
of a part.
Yet wondrous swift I run to reach the heaven
where Thou art.
O hill of gold and precious gems, grant in Thy
grace to me
A heart to melt, lord of my life, in ceaseless
love to Thee.

—— (To be continued)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N. B. Copies available for sale at the above Press.)

மதிப்புரை

சத்திய தருமச்சாலை நூற்றாண்டு விழா

திருஅருட்பா நூற்றாண்டு விழா மலர்

திருச்சிமாவட்ட திருச்சிராப்பள்ளி சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தாரின் வெளியீடு

திருவருட்பிரகாச வள்ளலார், சிதம்பர இராமலிங்க அடிகளாரின் சமரசச் சன்மார்க்க சங்கத்தின் கொள்கைகளைப் பின்பற்றுவதும், பரப்புவதும், இதற்கென வழிபாட்டுக் கூட்டங்கள், வாரக் கூட்டங்கள், திங்கட் கூட்டங்கள் முதலியன நிறுவுவதும், அவ்வழிகளில் பணி செய்யும் வகையும், முறையும் விளக்கி 'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன், பெற்றான் பொருள் வைப்புழி', என்ற தெய்வீக அடிப்படையில் ஈடுபட்டு ஒளி வளர் வாடா விளக்கேற்றி வைத்துச்சென்ற இராமலிங்க அடிகளாரின் சத்திய தருமச்சாலை வரலாற்றையும், அதை நிர்மாணித்து நடத்தி வரும் விபரமும், அடிகளாரின் கருணைப் பெருக்கும், உயிர்க்குலத்து மீதுவைத்த அருளினாலே, இறைவனிடத்துக் கொண்ட ஆராக்காதலால் ஆறு திருமுறைகளாகக்கொண்ட திருஅருட்பாக்கள் மொழிந்து அதன் மூலம் சன்மார்க்க தெய்வநிலை, சீவகாருண்ய ஒழுக்கங்கள் முதலானவற்றின் தாத்பரியமும் மூலாதாரமும் மிக விரிவாகவும், பூர்ணமாகவும், எடுத்தோதப்பற்றிருப்பதையும் தொகுத்து, எளிய இனிய தமிழில் இம்மலரில் தரப்பெற்றுளது. கண்கவர் அட்டைப்படத்தில், வடலூர் சத்தியஞான சபையின் அழகிய படத்தையும், மற்றும் கருணையே திருவுருவாய் வெள்ளை உடையில் திருநீறு பூசி சாந்தம் ஒளிரும் இராமலிங்க அடிகளின் திருவுருவப் படங்களையும், அடிகள் ஆதியில் உறைவிடமாகக் கொண்டிருந்த சித்திவளாகம் அறையின் படத்தையும் காணலாம். இம்மலர் வெளியிட்டிருக்கும் சங்கத்தாரின் சிறந்தபணி மிகவும் பாராட்டற்குரியது.

[விலை ரூபாய் - ஒன்று.]

தபால் சிலவு:- Ordinary Book-Post 0.55 np.
Registered Book-Post 1.05 np.

கிடைக்குமிடம்:

ந. இரா. ஊரன்,
சமயபுரம் அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

எந்நாளும் இன்பமே!

திரு. எ. மாணிக்கம் அவர்கள்,
"முருக நிலையம்", விசூர்.

அரம் போலும் கூர்மையரேனும், மரம் போன்று மக்கட் பண்பிலலாமல் வாழுகின்ற மாக்களுக்கு, மற்றவரின், ஏதும் அற்ற ஏழ்மையரின் மனநிலை யெங்கே புரியப்போகிறது. செல்வச் செருக்கால் அன்பும், அருளும் என்னவிலையென் றல்லவா கேட்பார்கள். தங்களால் பிறருககு நனமை செய்ய, மனமில்லாவிட்டாலும், தீமையாவது செய்யாமல் இருக்கப் பழகி னல்தானே. அதுதான் இல்லையே. பிறரது உழைப்பின் பயனையே தன்பிழைப்பாகக் கொண்டு, அன்னவரின் குருதியினைக் குடித் துக் கொழுத்துப்போன அழுத்தமனமுடையவர்களாயிற்றே. அத்தகையோரை வசதிமிக்கவர் என நினைப்பதைவிட (வ)சதி மிக்கவர் என்பதே சாலும்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."

என்ற நமது வையம் போற்றும் தெய்வப்புலவரின் திருவாய் மொழியைச் சற்றும் உணராத தகைசான்ற குணவான்கள் இவர்களே யாவர். இவர்களுக்குச் சொன்னாலும் புரியாது. தன்னாலும் தெரியாது. என்செய்வது? இவ்வாறு வாழ்பவர்கள் எவ்வாறு பிறருடைய அருமைப் பெருமைகளை அறிவர். ஒரு போதும் அறியார். அதனதன் அருமை, அதை உணர்ந்தவரே யறிவர். இதோ,

"கற்றோர் கனமறிவர் கற்றோரே கற்றறியா
மற்றோ ரறியார்; வருத்தமுறப் — பெற்றறியா
வந்தி பரிவாய் மகவைப் பெருந்துயரம்
நொந்தறிகு வாளோ நுவல்."

என நீதிவெண்பா ஓதி நிற்கிறது. மேலும் பரிவாய் என்றது, அப்பிள்ளையைப் பெறுந்துன்பத்தோடு, அக்கால் அப்பிள்ளை மாட்டு உண்டாகும் ஓர் அன்பை, அந்த அன்பையும் மலடி அறி யாள் எனச்சுட்டி நின்றது. (தொடரும்)

திருவொற்றியூரில் கலியநாயனுர் நினைவு

திருவிளக்கு நிதி ரூ. 1000/-

பிரளயத்தை மேல்வராது தடுத்தமையால் ஒற்றியூர் எனப் பெயர் பெற்றதும, வாசுகியை இறைவன் தமது திருவுருவிற் சேர்த்துக் கொண்டமையால் இறைவன் திருப்பெயர் 'படம்பக்க நாதர்' என்றும், ஏலேல சிங்கருக்கு மாணிக்கங்கள் விற்றமை யால் 'மாணிக்கத் தியாகர்' என்றும், அரசன் தருமங்களின கட்டளைகளைக் குறைத்து எழுதச் சொல்லிய ஏட்டில் வரிபிளந்து 'ஒற்றியூர் நீங்கல்' என்று எழுதினமையால் 'எழுத்தறியும் பெரு மான்' என்றும் வழங்கப் பெறுவதும்,

சுந்தரர் சங்கிலியாரை மணம்புரிந்த தலமாயதும்,

தேவார மூவர் பதிகம் பாடிய தலமாயதும்,

கலியநாயனுர் திருவிளக்குத் திருத்தொண்டு புரிந்ததும் ஆன திருவொற்றியூர் என்ற திருத்தலத்தில் பின் மூன்ருவது பாராவில் குறிப்பிட்ட வண்ணம் திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் சன்னதியில் ஒருநாள் முழுவதும் திருவிளக்கிடுவதன் பொருட்டு இத்தருமம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப் பெற்றது. இது 'திருவொற்றியூரில் கலியநாயனுர் நினைவுத் திருவிளக்கு நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 1000/- இது ஆண் டொன்றுக்கு 6¾-% வட்டி தரக்கூடிய நிலையான முதலீடாக கும்பகோணம் கூட்டுறவு மத்திய பாங்கில் 30-1-67ல் பிக்சட் டிபாஸிட் இரசீது நெ, 11292. 3 வருடங்களுக்கு ரூ. 500/-ம் கும்பகோணம் ஸ்டேட் பாங்கில் 19-7-67ல் ஆண்டொன்றுக்கு 7% வட்டிதரக்கூடிய பிக்சட் டிபாசிட் இரசீது நெ. 076125 5 வருடங்களுக்கு ரூ. 500/-ம் ஆக ரூ. 1000/- முதலீடு செய் யப்பெற்றுள்ளது. இது நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ள வர்களாலும் பரிபாலனம் செய்யப்பெற்றுவரும்.

3. அ. "விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினல் இடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார்"

என்றும்

"விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்"

என்றும் திருநெறிய தெய்வத் தமிழ்கூறுவதற்கேற்பத் திருவொற்றியூரில் திருவிளக்குத் தொண்டு செய்து மெய்ந்நெறி ஞானம் பெற்றவராகிய கலியநாயனர், திருவொற்றியூரில் திருவிளக்குத்தொண்டு செய்ததனை நினைவுகூர்ந்து ஆண்டுதோறும் இம்முதற்பொருளினின்று கிடைக்கும் வட்டித்தொகை திருவொற்றியூரில் ஸ்ரீ ஆதிபுரீசுவரர் சன்னதியில் நம்மால் குறிப்பிடப்பெறும் ஒருநாளில் அகண்ட திருவிளக்குகள் இடுவதற்குப் பயன்படுத்தப்பெறும்.

ஆ. 17-8-1959உ நம்மால் நிறுவப்பெற்றுள்ள திருக்கேதாரயாத்திரை வகையரு தருமக்கட்டளையில் 8 ஆவது பாராவில் குறிக்கப்பெற்றுள்ளவாறு திருவொற்றியூரில் படம்பக்கநாதராகிய ஆதிபுரீசுவரருக்குப் புனுகு சட்டம் சார்த்தும் நாளில் இத்திருவிளக்குத் தருமம் நடத்தப்பெற்று வரும்.

இ. இத்தருமத்தை நடத்துவதற்குரிய நிர்வாகச் செலவுகள் போக எஞ்சியுள்ள தொகையே இத்தருமத்தை நடத்தப் பயன்படுத்தப்பெறும்.

4. வட்டி வரவுக்கு ஏற்பவும் கால விலைக்கு ஏற்பவும் நம்மால் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி இத்திருவிளக்குத் தருமம் நடத்தப்பெற்று வரும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலும் மாற்றியமைக்கப் பெறமாட்டாது. இம்முதற் பொருள் நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்து வரும். இம் முதற்பொருள் திரும்பியளிக்கப்பெறின் அதிக வட்டி வரக்கூடிய அரசியல் கடன்தாள்களிலோ அல்லது நிலையான முதலீடுகளிலோ முதலீடு செய்யப்பெற்றுவரும்.

Tirupanandal
Dated 24-7-1967 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Tiruvadamarudhur Sub Registrar's office on 25-7-67 as No. 30 of 1967 of Book 4 volume 54 pages 57 to 59.